கடவுள் துணை

பார்வதிக்கு பரமசிவனுரைத்த

ஸ்ரீ வைத்திய

அரிச்சுவடி.

(முதற்பாகம்.)

[illegible] முதலியார் பாரியாள்

அம்மணி அம்மாள்

[illegible]

சென்னை-மூர்

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

[illegible] 1934 [illegible] அணா 4.

FOR

உ

கடவுள் துணை.

பரமசிவன் பார்வதிக் குபதேசித்த

வயித்திய அரிச்சுவடி.

S 245 (முதற்பாகம்.)

—(*)—

கலி விருத்தம்.

பார்வதிக்குப் பரமனுரைத்திட்ட
சீர்புகழும் வயித்திய நூலினில்
ஏர்புகழு மரிச்சுவடிசொல
கார்புகழுங் கணபதியைகாப்பதே.

பூரணமா வயித்தியங்க ளுணரவேண்டில்
புகலுகிறேன் பரமனுமைக் குரைத்தவண்ணம்
காரணமாய் கண்டுமன தறிவைநீட்டி
கார்க்கமென்று யின்னூலை கையில்தூக்கி
சீரணமாய் கற்றுணர்ந்து தெளிவாயாகில்
ஜெகமீதி லுனக்குபழி சார்வதேது
நேர்மனமாய் வாகடத்தின் வரிசைகாண
நிகழ்த்திய வயித்தியவரிச் சுவடிபாரே.
பார்த்தவுடன் படிகம்போல் காணுமப்பா
பாலர்முதல் யாவர்களும் காணநன்றாய்
கார்த்திடவே ஜெனனவகை. முத்[illegible]ரிந்து
கையிலுள்ள நாடிபின்னால் காணவேணும்
பூர்த்தியதாய் நாடிகுண மறியவேண்டி
புகருமொரு வியாதிகளை சொல்லவேண்டும்

நேர்த்தியதாய் சரக்கரிந்து அவிழ்தங்கூட்ட
நேரான வயித்தியவரிச் சுவடிகாணே.

காணுமல் வீணரைப்போல் பேசவேண்டாம்
கணக்கரியா வயித்தியங்கள் செய்யவேண்டாம்
வீணுக யொருவர்கையை பிடிக்கவேண்டாம்
வாயில்வந்த படியுளரி சொல்லவேண்டாம்
ஊனமாம் பிணியரியா மருந்தையீந்து
உலகுதனில் வாகடத்தைப் பழிக்கவேண்டாம்
தேனுன வயித்தியவரிச் சுவடிதன்னை
தானுணர்ந்து பண்டிதன்பேர் தரித்துக்கொள்ளே.

ஜீவ உற்பத்தியரியும் விபரம்.

ஜென்மாமனிதர்முன் ஜென்மிக்கும்வாருகேளாய்
மின்னமாசுக்கிலத்திற் பிராணவாயுகள்தான்சென்று
இன்னமாம்வாய்வுசேர சென்றதுகெற்பமுற்று
மூன்றுமாமிரத்தம்சூழ்ந்து உதாரணவாய்விற்றங்கும்.

இ-ள். ஜெனனமாவது எவ்விதமெனில், சுக்கிலத்தில் பிராண வாய்வுசென்று கெற்பமுண்டாகி இரத்தஞ்சூழ்ந்து உதாரணவாய்வில் தங்கும் எ-று. 1

சூழ்ந்ததுசுக்கிலத்தில் சுரோணிதங்கலக்குமென்று
பூந்திடுவியாதிமூன்றும் பொருந்தியகுமுளிபோலே
மேந்தியேதிரளுமேழில் யீரேழுதன்னிலூர்க்கும்
மாந்தநாழிருபத்தஞ்சி லருங்குருமுளைபோல்தோணும்.

இ-ள். தங்கிய சுக்கிலத்தில் சுரோணிதங் கலந்து அதில் வியாதிமூன்றும் குமிளிபோல் கலக்கும் கலந்த ஏழாநாளில் உண்டையாகத்திரளும் இருபத்தஞ்சாநாளில் குருத்தின் முளைபோல் காணும் எ-று. 2

முந்தியதிங்கள்முன்னில் மூளைந்ததுகட்டியாகும்
பிந்தியதிங்கள்தன்னில் பிடரிதோல்முதுகுமன்றி
உந்திசூழ்மூன்றுந்திங்கள் உடல்விலா அரைகைகால்கள்
உந்திக்குநாளாந்திங்கள் உற்றதோர்மூக்குண்டாமே.

இ-ள். குருத்தைப்போலுள்ளது முன் மாதத்தில் கட்டியாகும் இரண்டாம்மாதத்தில் கழுத்து தோள் முதுகு உண்டாகும் மூன்றுமாதத்தில் உந்தி உடல்விலா அரை கை கால்களுண்டு. நான்கா மாதத்தில் மூக்குண்டாகும் எ-று. 3

ஐஞ்செனுந்திங்கள்தன்னி லாகிடும்செவியும்நாசி
பொஞ்சிடுமாராந்திங்கள் பொருந்திடும்நகமேய்கீறு
உஞ்சியசலமலங்க ளூத்ததோர்துவாரமுண்டாம்
வஞ்சியர்கெர்ப்பந்தன்னில் வழுத்தியபடியேகாணே.

இ-ள். ஐந்தாமாதத்தில் செவியும் நாசியும் உண்டாகும் ஆறாமாதத்தில் விரல்களும் நகங்களுமுண்டு ஏழாமாதத்தில் விரல் கீல்களும் சலம் மலம் துவாரமுண்டாம் இப்படி ஆட்வரின் கெற்பத்தில் அறிவீர்கள் எ-று. 4

நரம்புடன்நாடிசந்து நாடிய குடல்கள்கொழுப்பு
பரந்தகால்கரங்களுண்டாற் பத்தியயெட்டாந்திங்கள்
சிரந்தனில்மயிருமுண்டாஞ் சிக்கெனபிலமுமுண்டாம்
துறந்தறஅன்னசாரம் தொப்புளில்சலம்புகுக்கும்.

இ-ள். ஏழாமாதத்தில் நரம்பு நாடி சந்துகுடல் கொழுப்புண்டாகும் எட்டாமாதத்தில் பரந்தகைகாலுண்டாம் இத்துடன் சிரசில் ரோமமும் பலனுமுண்டாகி அன்னசார ரசம் தொப்புளின் வழியாக ஊறும் எ-று. 4

ஒன்பதாந்திங்கள்தன்னில் உணர்த்தியமருவுமுண்டாம்
பண்புருகெற்பந்தன்னில் வருத்தநோய்பிலமுமுண்டாம்

தம்பிரான் தனைநினைந்து தவமுறுநிலையாய்நின்றே
அன்புடன்கையெடுத்தேன் அரும்பதமருளாயென்று

இ-ள். ஒன்பதாமாதத்தில் உணர்வும் அறிவு முண்டாகி தாயாருக்கு கெற்பவேதனையுண்டாம் அப்போது பரமேஸ்வரனை தியானிக்க வேண்டும் எ-று. 6

ஆர்தவபத்துமாதம் ஆதித்தனருளினாலே
சிரவேபிராணவாய்வு சிரமதுகீழதாகும்
பாரதிற்கொணர்ந்துதள்ளும் பயன்றுமுன்னறிவதல்லால்
சேரவேமாதியாகி திகைத்துநொந்தலருமென்றே.

இ-ள். பத்தாமாதத்தில் பிராணவாயுவால் சிரசு கீழதாகும் பிறகு பூலோக உற்பத்தியாகும் அப்போது அந்த மதலையையீன்ற அன்னைக்கு கெற்பநோயடங்கும் எ-று. 7

கெற்பதானங்கள்பண்ண கெணந்தனிற்சரங்கள்நாசி
வற்பெனபிராணவாய்வு வலத்திலேயோடிலாணுக்கு
பெற்பனயிடத்திலோடில் சிறந்ததுபெண்ணதாகும்
மற்கரவுதயமாகில் மலியில்லாகுருடுவூமை.

இ-ள். கெற்பதானங்கள் செய்யும்போது நாசியில் சுரமானது பிராணவாய்வு வலதுபக்கமோடினால் ஆணும், இடதுபக்கமோடினால் பெண்ணாகும், உதயமாக ஓடினால் குருடு ஊமையாகும் எ-று. 8

இப்படிசெடலமானத் திலவிடுமன்னநதண்ணீர்
மூப்பதுநாழிகையில் மூன்றுகூறுய்பிரியும்
மெப்படியிரண்டுகூறு மெலசலமலங்களாகி.
செப்புமோர்கூறுரத்தம் சேர்ந்துடல்தனைவளர்க்கும்

இ-ள். இப்படி செடலமானதில் விடுங் தண்ணீர் 30 நாழிகையில் மூன்று கூராகப்பிரியும் அதில் இரண்டுகூரு மெய்ஜலம் மலமாகும் மற்ற யொருகூறும் ரத்தமாகி உடலை வளர்க்கும் எ-று. 9

மெய்யென்றதேகந்தன்னில் மூன்றரைகோடிரோமம்
துய்யவேதுவாரந்தானும் துலங்கவேயொன்பதாகும்
உய்யதோர்சடலந்தன்னி லுப்பிதுமலம்தன்னில்
லீயவேருழக்குபித்தம் சிலேட்டும்முரியதாமே.

இ-ள். மெய்யென்னும் திரேகத்திலிடும் மூன்றரை கோடி ரோமம் துவாரம் 9-சடலத்தில் 2 பெறு பலமே தெனில் பித்தம் ஒழக்கு சிலேத்துமம் உரியென்று அரிவீர்கள் எ-று. 10

மூன்னுங்கயமுறு முன்னுழியாகும்
பின்னும்பயித்தியம் பேசமூவுழக்காம்
பின்னுமுதிர மொருநாழியாகும்
ஒதுப்...மிநீ ருரைக்கும்நாவுரியே.

இ-ள். கயம் முன்னுழி பித்தம் முக்கால்படி உதிரம் ஒரு நாழி உமிநீர் நாநாழி எ-று. 11

நாடியின் குறி.

கரிமுகனடியைப்போற்றி கைதனில்நாடிபார்க்கில்
பெருவிரலிடையேவிட்டு பிடித்துடன்நடுவேதொட்டால்
ஒருவிரலோடில்வாத மிருவிரல்பித்தமாகும்
திருவிரல்மூன்றுமோடில் சிலேட்டுமநாடிதானே.

இ-ள். வயித்தியரானவர்கள் வியாதி யஸ்தர்களின் கைகளைப் பிடிக்கும்போது கடவுளை வாழ்த்தி நாடி பார்க்கில் புருஷாளுக்கு இடது கையைநீக்கி வலது கையிற்

பெருவிரலின்கீழ் மணிக்கட்டினிடமாக இடதுகையால் பிடித்து வலதுகையை முன்னேவைத்து பார்க்கில் ஒரு விரல் வோடுமாகில் வாதம் ரெண்டுவிரலோடுமாகில் பித்தம் மூன்று விரலோடு மாகில் சிலேத்துமமென்று அறியவும் எ-று. 12

அங்கையையுருக்கிநெட்டி யடவுடன்மெல்லாவாங்கிச்
செங்கையால்பிடித்துநாடி திடத்துடன்பாற்கில்கேளு
முன்கையிற்பறந்துநாடி மெள்ளவேயோடுமாகில்
மங்கையேவாதமென்று மனதினுலுரைத்திடாயே.

இ-ள். கையைபிடித்து கசக்கி நட்டையொடித்து நாடிபார்க்கில் முன்கையின் நாடியானது பறந்து மெள்ள வோடில் வாதமென்று அறிந்து சொல்லவும் எ-று 13

எத்தமநாடிநொந்து உயர்ந்ததுபதரியோடில்
பித்தமநாடியென்றே பிசகரவரிந்துகொள்மின்
மெத்தவேபிரண்டொதிங்கி விரகெனதெரிகுமாகில்
சுத்தமாஞ்சிலேத்மமென்று சொல்லுமெஞ்ஞாலமீதே.

இ-ள். உத்தரி நாடியானது நொந்து பதரியோடில் பித்தமென்றறிந்து சொல்லவும் நாடியானது புரண்டு ஒதுங்கி தெரிக்குமாகில் சிலேத்துமமென்றுசொல்லவும் எ-று

ஞாலமேலுடலந்தன்னில் நயல்பிணியில்லாதார்க்கு
காலமேவாதமோடுங் கடும்பகல்பித்தமோடும்
மாலையிலையமோடும் என்னவேமகிழ்ந்துநாளுஞ்
சாலவேவயித்தியோர்கள் தாமதுதெளிவர்தாமே.

இ-ள். வியாதியில்லாதவர்கள் கையில் காலையில்வாத நாடிவோடும் பகலில் பித்தநாடியோடும் மாலையிலையமோடுமென்று வயித்தியர்கள் அரியவேண்டும் எ-று. 15

தெரிந்தவர்கைக்குள்நாடி செய்யவெள்ளரிக்காய்தின்ன
குளிந்திடில்வாதமாகும் குலவியவரையோடென்ன
விளங்கியமேனிதானும் வெச்சனில்பித்தமாகும்
வளமருந்துவரேயென்று வழுத்திடுஞ்சேற்பமென்ன

இ-ள். கையில் நாடிபார்க்கில் வெள்ளரிக்காய்போல் குளிர்ந்துவோடில் வாதமாகும் மேனியானது சென்னியில் பித்தமாகும் வாயில் புளிப்புதோன்றில் வாதம் இப்படி யாக வரிந்துசொல்லவேண்டும் எ-று. 17

சிலேத்மமுதிர்த்தபோது தித்திப்புநாவில்தோன்றும்
மேட்டியாங்கசப்புமீறில் பெருத்ததுபித்தமாகும்
ஈட்டியபுளிப்புமீறில் யெழுந்ததுவாதமென்ன
நாட்டமுத்திதனையெல்லாம் நயம்பெறநாடிசெப்பே.

இ-ள். சிலேத்துமமானல் நாவில் தித்திப்புதோன்றும் கசக்குமாகில் பித்தம் புளிக்குமாகில் வாதம் இப்படி நாடி யறியலாம் எ-று. 17

செப்புமணந்தனில்வாதம் தீயதுகாதுமித்தம்
அற்பனவித்துசிவ ன தினெழுசடலந்தன்னில்
ஒற்பலநீலமோர்த்தும் உடலொக்கநிற்பதாகும்
நெற்புறயிதனையெல்லாம் நீயுறறிவார்தாமே.

இ-ள். வாதத்தினில் தீயென்னும் சூடுண்டாகி காது மத்தியமாகும் விந்தென்னும் வித்தினல் உற்பத்தியாகிய சடலத்தில் நீர்கோர்த்து நீலம்போல் திரேகம் தோன்றும் இதுகளையெல்லாம் நன்ருக அறிந்துசொல்வீர்கள் எ-று.

நாடி மாதக்குறிப்பு.

சித்திரைவைகாசிக்ரு செழுங்கதிருதயந்தன்னில்
அர்த்தமாய்ஆனியாடி அற்பிசிகார்த்திகைக்கும்

மத்தியானத்தில்பார்க்க மார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேற்கு விழுகின்றநேரந்தானே.

இ-ள். வயித்தியர்கள் நாடிபார்க்கவேண்டில்சித்திரை வைகாசிமாதம் காலையில் சூரியவுதயத்திற்குப்பார்க்கவேண்டும் ஆடி அற்பசி கார்த்திகைக்கு மத்தியானம் சூரியன் உச்சியில் நிற்கும்போது பார்க்கவேண்டும்மார்கழிதைமாசி இம்மாதங்களில் சூரியன் அஸ்தமிக்குந் தருணத்தில் பார்க்கவேண்டும் எ-று. 19

தானதுபங்குனிக்கு தனதுநல்லாவணிக்கும்
மீனமாம்புரட்டாசிக்கு மித்ராத்திரியில்பார்க்க
தேனெனமூன்றுநாடி தெளியவேகாணுமென்றுங்
காணவேயீசன்சொன்னர் கருதியேகண்டிடாயே.

இ-ள். பங்குனிக்கும் ஆவணிக்கும் புரட்டாசிக்கும் மித்ராத்திரியில் பார்க்கவேண்டும் அம்மாதங்களில் சொன்னமுறைப்பிரகாரம் பார்க்க மூன்றுநாடியுந் தெளிவுறத் தோன்றும் எ-று. 20

நாடிநிலை அரியவும்.

ஓதுநாடித் துகையுமதிலூறும்
வாதபித்த சிலேற்பானவாமையும்
பேதமான வியாதியின்பேர்களும்
மாதியாய்பரன் உமைதனக்கோதினன்.

இ-ள். மானிடர்களின் மெய்யில் உண்டாகும் நாடிகளின் துகையும் அதில்ஊறும் வாதபித்தசிலேற்பனமும் அதிலுண்டாகும் வியாதிகளின்பேரும் இவ்வகளை யெல்லாம் விவரமாக உமைதனக்கு பரமேஸ்வரன் திருவுளம் பற்றினர் எ-று. 21

திருவுருமுனிவன்கூறு செய்கையாம்கைகள்தன்னில்
வருபலவியாதிமூலம் வகைபடிபிரித்துச்சொல்ல
உருவுநாடியாலு மென்முகமலநீராலும்
தெருவுள்ளநாவுநாசி தித்திக்கும்குறிகளெட்டே.

இ-ள். முனிவர் கூறியவண்ணம் கைகளில் வரும் பலவியாதி மீளக்காணவேண்டில் நாடியினாலும் முகக்குறியினாலும் மல நீரினாலும் நாசிநாவுகளில் தித்திப்பு கயப்பு துவர்ப்பு காரல் இவ்விதமாக எட்டு குறிகளினால் காண வேண்டும் எ-று. 22

உரைத்திடுந்தானமெட்டுஞ் செய்குறியுரைக்குங்காலே
வருந்தியநாடிச்செய்கை மங்கையேவழுத்தக்கேளாய்
உரித்தெழுங்கரியின்மீதே ஓமெனுமுந்தியாலே
வருத்தரெண்டலியேமூலம் பருந்தெழுநாடிபத்தே.

இ-ள். மேற்கூறிய தானங்கள் எட்டிலும் செய்குறி அரிய நாடி தெரியவெனில் கரிவின்மீது உந்தியினிடமாக னின்று முதல் உண்டாகும்படி பத்துயென்று அறிவீர்கள் எ-று. 23

பத்தும்பேரிடையினோடும் பின்கலைச்சுழிளைபாரில்
அத்திசிங்கிவைகரந்தாரி அலம்புருகதமேசங்கி
உத்தமநாடிபத்தும் சுகமதாயுந்திக்கீழ்மேல்
பத்தியயெழுபத்திராயிர நரம்பெனசெப்பலாமே.

இ-ள். திரேகத்தினிடமாக பின்கலை சுழியாகிய பத்திய நாடிகளானது உந்தியின் சுகமென்னும் கீழ்மேலும் உண்டான நரம்புகள் எழுபத்திராயிரமென்று அறிவீர்கள் எ-று. 24

செப்பியதெழுபத்தீராயிரச் சென்மமாமுடலில்சோத
லெப்படியென்னவென்ருய் எழுவடல்விழுந்துபோகல்
மப்புருகுழல்நல்மாதே வளர்க்கிறமடியீராக
ஒப்புடன்நாடிநிற்கும் முந்தியில்வுணர்ந்துகொள்ளே.

இ-ள். மேற்கூறிய எழுபத்தீராயிரம் நரம்புகளும் எப்படி விழுந்துபோவதென்ருல் சிரமுதற்கொண்டு ரெண்டு பிரிவாக நாடி நிற்கும் அதை உந்தியின் வழியாக அறிந்து கொள்ளவேண்டும் எ-று. 25

உந்தியேமூலமாக வுரியென்றுகீழ்மேலாக
வந்திடும்நாடிதானே வுடம்பினில்வகுக்கக்கேளாய்
துந்தியோர்சென்னிமீதே ளாயிரமாகுமுண்மை
பந்தொடிசெவியிரண்டு பத்துடன்முந்நூறுதானே.

இ-ள். உந்தி முதலாகக் கீழ்மேலும் மெய்யில் உண்டாகும்படி நாடிகள் தங்குமிடம் யாதெனில், சென்னியில் ஆயிரம் இரண்டு செவியினிடம் முந்நூறு நரம்புகள் எ-று. 26

வருபழிரெண்டில்தானும் மாயிரமாகமூக்கில்
லுரியமூவாயிரத்தி முந்நூத்திமுப்பதாகும்
உருவுருபிடரிதோள்மேல் லுரையாளுமுயிரம்தென்ன
கருவினில்முளைத்தநாடிக் கண்டதைகருதுவோமே.

இ-ள். விழிகள் ரெண்டிலும் ஆயிரம் மூக்கில் மூவாயிரத்தி முந்நூத்தி முப்பது எருவென்னும் திரேகத்தின் மீது பிடரிதோள் இது முதலாக கருவில் அமைத்த நாடிகள் சொல்லுவோம் எ-று. 27

கண்டத்திலாயிரமதாகும் கைரண்டில்மூவாயிரந்தான்
தொண்டைக்குகீழதாகத் தொப்புளில்மேலதாக

ஒண்டொடிகோளா யொன்பதாயிரத்தொருபத்தில்
அண்டத்தின்முனிவன்கூறும் ஆயுருவேதமாமே.

இ-ள். கண்டத்தில் ஆயிரம் நரம்புகளுண்டு கைகள் இரண்டிலும் மூவாயிரம் தொண்டைக்கு கீழிருந்து தொப்புளுக்கு மேல்வரைக்கும் உண்டான நாடி ஒன்பதாயிரத்திப்பத்து இப்படியாக பரமேஸ்வரன் வகுத்தனர் எ-று. 28

குரிக்கின்மேற்பிடரிகீழே கோதையேயாயிரந்தான்
மரித்திடில்விலாவில்நாடி வளர்மூவாயிரம்தென்ன
குரிப்புடன்லிங்கமீது அடிவயரடுத்தநாடி
சிருத்திடும்விழியேழாயிர மென்றுசெப்பலாமே.

இ-ள். குருகிய மேற்பிடரியின் கீழ்நாடி ஆயிரமாகும் விலாவில்நாடி மூவாயிரம் லிங்கத்தினின்று அடிவயர் வரைக்கும் ஏழாயிரமாகும் சிரித்த விழியுள்ள மாதே எ-று. 29

பேசியமூலநாடி பெருமூவாயிரமதாகும்
காசினிமுளையாம்சந்தில் ரெண்டாயிரம்கருதிக்கொள்ளு
வீசியபாதந்தன்னில் விளம்பியேனுயிரத்தினேடு
ஓசைசேர்ந்தருநூத்தன்பா னாலெனவோதும்நூலே.

இ-ள். மூலத்தின் நாடியானதுமூவாயிரமாகும் ஸ்நானத்தின் சந்தில் ரெண்டாயிரமாகும் பாதத்தில்நாடி ஆயிரத்தி அருநூத்தி அன்பத்தி நாலாகும் எ-று. 30

மொய்குழல்மானேகேளாய் முடிச்சளதலங்கள்கைகால்
எய்தியகோஜம்முந்தி இதையமோடின்னங்கேளாய்
பையரவல்குல்மூலம் பகர்விடாமுடிச்சோடுச்சி
வையுறுமெழுபத்திராயிரமதாய் வகுக்கலாமே.

இ-ள். தலகமென்னும் கைகால்களும் கோஜம் மூர்த்தி இதையம் அல்குல் விலாமுடி என்னும் உச்சி இவைகளில் உண்டாகும் நாடிகள் எழுபத்தீராயிரமென்று அறியும் எ-று. 31

இப்படியெழுபத்தீரா யிரநரம்புவைகண்டு
ஒப்புடன்நாடிநிற்கு மடவினையுரைக்கக்கேளாய்
வெப்புருவாதபித்தம் சிலேத்துமமென்னுமூன்றும்
தப்பிலாதரிந்துகொள்ளும் குரிகுணம்சாரலாமே.

இ-ள். மேற்கூறிய முறையோடுநாடியரிந்துகொண்டு நாடிநிற்கும் நிலை தெரிந்துக்கொண்டு பிறகு வாதபித்தம் சிலேத்துமமம் இவை மூன்றும் தெரியும்படி குரிகளைத் தெரிவிப்போம் எ-று. 32

இபம்பிபபுருஷருக்கு வலக்கரநாடியெல்லை
இயங்கிவகிளிமின்னார்க்கு யிடக்கரமாகுமென்பர்
நயம்பெறகெட்டிவாங்கி நல்குமங்குட்டிமூலம்
தயங்கியபசைவைதள்ளி பார்ப்பதுநாடி தானே.

இ-ள். புருஷருக்கெல்லாம் வலதுகையில் நாடிபார்க்க வேண்டும் ஸ்ரீகளுக்கெல்லாம் இடதுகையில் பார்க்க வேண்டும் முதலாவது கையைப் பிடிக்கும்போது கட்டைவாங்கி நாடிபார்க்க வேண்டும் எ-று. 33

நாடி நிற்கு நிலை.

செந்திருவுமையேகேளாய் சேருதர்ச்சனியுமூர்த்தி
வந்திருநாவிமூன்று மடவிலேவைத்தபோது
முந்தரிசனிகீழ்வாதம் மொந்தமத்துகீழ்பித்தம்
பந்தொடிநாவிகெர்ப மென்றுதான்பகரலாமே.

இ-ள். பரமேஸ்வரன் உமையைப்பார்த்து கூறுகின்றார். கேளாய் பெண்ணே மானிடரானவர்களில் சென்னி உந்தி நாபியென்று சொல்லும் இந்த மூன்று இடங்களிலும் அமைத்தபோது சென்னியின் கீழ் உள்ளது வாதம் உந்தியின்கீழ் பித்தம் நாபினில் சிலேற்பனமென்று அறிவீர்கள் எ-று. 34

தந்திரிபோலமூன்று தானமுமறிந்துகொண்டால்
லுந்தியவாதநாடின் குணக்குறிவுரைக்கக்கேளாய்
கொந்துசேர்குயிலேயன்னங் கொக்குமயில்ஒணான்
முந்தவேநடக்கக்கண்டால் வாதத்தின்முறையதாமே.

இ-ள். மேற்கூறிய ஸ்தானங்கள் மூன்று மரிந்து கொண்டு உந்தியின் வாதநாடியின் குணக்குரியரிவது எவ்விதமென்றால் குயில், அன்னம், கொக்கு, மயில், ஒணான் இவைகள் நடப்பதுபோல் நாடி நடக்குமாகில் வாதமென்று அறிவீர்கள் எ-று. 36

தாக்கியபித்தநாடி தான்செய்யுங்குறிகுணங்கள்
விக்குவார்முலேயேயட்டை ஆமைபோல்நடக்குமென்பார்
ஊக்கமாஞ்சிலேற்பநாடி யுகந்திடிந்தவளைப்பாம்பு
போக்கொருநடையதாகும் மென்முனிபுகழ்ந்தவாரே.

இ-ள். பித்தநாடி யறிவது எவ்விதமென்றால், அட்டை ஆமைகள்போல் நடக்கும் சிலேற்பனநாடி தவளை பாம்புபோல் நடக்கும் இவ்விதமாகக் கண்டு கொள்ளவும் எ-று. 36

வாழிசேர்மானேரெண்டு வாதமும்பித்தமொன்றுங்
கோழறநடக்குவண்மை கொடுஞ்சுமைதலேமேற்கொண்டு
நாலுறநடப்போனுக நடுவெனச்சலியாதோடும்
மூவுறுபித்தபாண்டு மொழிபக்கேள்சிலேற்பமென்றே.

இ-ள். வாதம்ரெண்டும் பித்தம் ஒன்றும் கூடிய நாடியானது நடப்பது எவ்விதமென்றால், தலையின்மீதுபெரும் பாரம் தூக்கி நடப்பவன்போல் நடக்கும் நாடியானது நடுவில் தானே ஓடுமாகில் பித்தம்ரெண்டு சிலேற்பனம் ஒன்றென்றறியவும் எ-று. 37

விடுவிழிமானேபிள்ளைக் கண்வளர்கொட்டிபோல
அடுவுறவசத்தல்போலா மாருசேர்பணமிரண்டும்
இடருருவாதமொன் றெழும்பிடில்தனைபார்க்கும்
கடிகியபுணர்ச்சிபோல நடப்பதுகண்டுகொள்ளே.

இ-ள். பிள்ளைகளின் கண்களைப்போலும் கோணலாகியும் அசைவுற்று நடக்கும் சிலேற்பன நாடிரெண்டும் அதில் வாதமொன்று எழும்பிடில் புணர்ச்சிபோல் நடக்கும் எ-று. 38

கொள்ளுதவாதம்ரெண்டும் சிலேற்பனமொன்றுகூடில்
அள்ளிலைநடுவேவற்கெண்ணு யரணைவால்முறிந்துவீழ்ந்து
துள்ளியசுழலும்போலாம் சோர்வுறுபித்தம்ரெண்டு
மெள்ளிடவாதமொன்றுங் கூடிலோ உரைக்கக்கேளே.

இ-ள். வாதம் ரெண்டும் சிலேற்பனமொன்றுங்கூடில் அள்ளிலைப்போல நடுவேகிண்ணும் பித்தமாகில் அரணைவால் அரந்துவிழுந்து துடிப்பதுபோல் துடிக்கும் அதில் வாதம் ஒன்றுகூடில் சொல்லுவேன் கேளும் எ-று. 39

துடியிணையடித்தாற்போல தேவியேசிலேற்பமென்று
கடுகியபித்தமொன்றும் நடப்பதுகாணவென்று
படைவறஅல்குல்லாளே மஞ்சைபாம்பென்னவோடு
மடவிலேயறிந்துகொள்ளு மாயிருயுருவேமாதே.

இ-ள். படபடவென்று துடிக்குமாகில் சிலேற்பனம் ரெண்டுமாகும் பித்தமென்றால் மஞ்சை என்னும் மேகம் போலும் பாம்பைப்போலோடும் எ-று. 40

வேதமேயுரைத்தவுண்மை மெய்வாதம்வீடுதொப்புள்
ஓதியபித்தனுக்கு தானமேசிலேற்பனத்துக்
காதியாமிதையத்தின்மே லாருமேஆன்றுமென்றுந்
தீதிலாமுன்னோர்பேசும் வாகடம்செய்கையாமே.

இ-ள். பரமேஸ்வரன் உரைத்தவண்ணம் வாதத்தின் வீடானது தொப்பிளிடம் பித்தத்திற்கு ஸ்தானம் சிலேற்பனமுதல் எ-று. 41

வாதபித்தம் சிலேற்பனம்செய்குறி.

மேவியவாதஞ்செய்யுங் குணந்தனைவிளம்பக்கேளாய்
கூவியவயற்றுமந்தம் சந்துலாபெருந்துநோவால்
சீறியதாதுநாசம் செருத்துடன்நீர்வீழும்
காலியகண்ணினாலே மலமதிகருகிவீழும்.

இ-ள். வாதமானது செய்யுங்குணம் யாதெனில், வயறு மந்தமாகும் நீர் தாரையின்வழி நோயாம், இந்திரியம் நாசமாகும் சிறுநீர் ஒழுக்குண்டாம் மலமானது கரிகி விழும் மாதே எ-று. 42

பித்தம் செய்குறி.

எல்லவார்க்குமூவார்பித்தம் செய்குறியியம்பக்கேளாய்
சொல்லவேவிழிசுண்டு குளிர்ந்திருண்டிருக்குமல்லா
சில்லநீர்கடுத்துநொந்து சிறுகெனவிழுந்துபின்னம்
அல்லவேயரியச்சொன்னோம் நவின்றிடுமுண்மைதானே.

இ-ள். பித்தமானது செய்குறி யாதெனில், விழி யானது சுழண்டு இருண்டிருக்கும் நீரானது கடுத்து கொ க்து விழும் இவ்விதமாக வியாதியை உண்மையாக அறி வீர்கள் எ-று. 43

சிலேற்பனஞ் செய்குறி

சேத்துடல்செய்குணங்கள் சில்லெனவுடம்புவேற்கும்
ஏத்தமாயுமிநீர்தானும் பினித்ததுநாவெளுக்கும்
நாத்தநீறழுந்துவீழும் நயம்பெறவெளுக்குமேனி
தோத்துமிக்குணங்கள்கண்டா சிலேற்பனதொகுதியாமே.

இ-ள். சிலேற்பனஞ் செய்குறி யாதெனில், சில் லென்றதாக உடம்புவேர்க்கும் வாயில் உண்டாகும் உமிழ் நீரானது இனிப்புண்டாகி நாக்கானது வெளுத்திருக்கும் சிறுநீரானது நாத்தமுண்டாகும் மேனியானது வெளுக் கும் இவ்விதமான குறியுள்ளது சிலேற்பனமென்று அறி யவும் எ-று. 44

இதுவுமது வேறு.

அந்தவாதங்கள்ரெண்டும் மதித்திடும்பித்தமொன்று
தொந்தித்துநடக்குமாகில் தோன்றிடுங்குணத்தைகேளாய்
வந்துநொந்தூரம்விம்மி மதர்த்திடுமாதரோகம்
சிந்தனேமிகவுண்டாகி தின்றதுசெரியாதென்னே.

இ-ள். வாதங்கள் ரெண்டும் அத்துடன் பித்தமொன் றும் கூடி நடக்குமாகில் வயிரானது நொந்துநொந்து கடு கடுத்து சாப்பிடும்படியானது ஜீரணிக்காம லிருக்கும் எ-று. 45

செய்யதோர்பித்தம்ரெண்டு சிலேத்துமமெழுந்ததாகில்
ஐயதோர்பசியுமில்லை அடிக்கடிவுதிரம்வீழும்
துய்யதோர்நயனநீரும் சுத்தமேமஞ்சள்போலாய்
பேய்கள்போல்பித்தத்தில் பேசில்பித்தசோபனங்களாமே.

இ-ள். பித்தம் ரெண்டும் அத்துடன் சிலேத்தும மெழுந்தாகில் பசிதீவனையிராது அடிக்கடி ஆசனத்தின் வழியாக ரத்தம் வீழும் சிருநீரானது மஞ்சள்போலிருக் கும் பேய்போல் பித்தலும் பினத்தலுமுண்டு பித்தசிலேற் பனமானல் எ-று. 46

ஒப்பியசிலேற்பம்ரெண்டு வாதமுமொன்றதாகில்
வெப்புருகனல்மேலிட்டு யினிப்பையுமிகவும்வென்று
தப்பிலாபசியுமுண்டாம் கவனமேபத்தினிற்கும்
இப்படிகுணமேகண்டால் சிலேற்பனவாதமென்னே.

இ-ள். சிலேற்பனம் ரெண்டில் வாதமென்று கூடில் திரேகத்தில் சூடானது அதிகரித்து இனிப்பானஉணவின் மேல் அபேட்சையாயிருக்கும் பசி அதிகமுண்டாகி தண் ணீர்மேல் அதிக கவனமாயிருக்கும் இவ்விதமாக நாடி யறியவும் எ-று. 47

எண்ணியபித்தம்ரெண்டு வாதமொன்றெழுந்ததாகில்
புண்ணெனவுடம்புநோவாம்புகைந்தெனவெரிக்குநெஞ்சி
திண்ணமாய்நாவறண்டு சிறுத்துநீர்கடுத்துவீழும் (ல்
அன்னவருரைத்தவுண்மை ஆயுருவேதமாமே

இ-ள். பித்தம் ரெண்டும் வாதமொன்றுங்கூடி எழும் பிடில் மெய்நோவாம் நெஞ்சானது புகைந்து புகைந்து எரிச்சலுண்டாகும் நாவானது வரளும் சிறுநீரானது கடுத்துவிழும் பரமன் கூறியவண்ணம் அறிவீர் எ-று. 48

தாங்கியசிலேற்பம்ரெண்டுந் தனிபித்தமெழுந்ததாகில்
ஓங்கியசன்னியுண்டா முச்சிநோய்செவிகேளாது
பாங்குடனுவிநொந்து பத்தியஞ்சொரியதாகும்
பூங்கொடிபித்தஞ்சிலேற்ப மென்றுதான்புகழுவீரே.

இ-ள். சிலேற்பனம் ரெண்டும் பித்தம் தனித்து எழுந்ததாகில் ஜன்னியுடன் உச்சியானது நோவும் செவி கேளாது நாவியானது நொந்து பத்தியஞ்செரியாது பித்த சிலேற்பமானுல் எ-று. 49

மானேகேள்வாதம்ரெண்டு வகுத்தசேர்பனமுங்கூடில்
ஆனதோர்சரீரநோவாம் அகங்கைகால்திமித்துகாட்டும்
ஊனமாமுதரத்துள்ளே வூத்தையுமிருந்துவீழும்
பானலங்கன்னிரார்கேள் வாதசிலேற்பனபாம்பாரே.

இ-ள். வாதம்ரெண்டும் சிலேற்பனமுங்கூடில் சரீர நோயுடன் கைகால் திமித்திருக்கும் உதிரத்துடன் ஊத்தையு கலந்துவிழும் வாதசிலேற்பனமானுல் எ-று. 50

மரணக்குறி.

பார்த்திடில்வாதபித்தம் பதிந்ததுசேர்ப்பனங்கள்
ஆர்த்திடுமரணிவால்போல் துடித்திடுதிரேகநோவாய்
வேர்த்துடல்பட்டுதானே மெய்யெலாங்குவிழ்ந்ததாகி
கோர்த்ததோர்யவர்கள்நாடி மரணமாங்குறிப்பதாமே.

இ-ள். வாதபித்த நாடியானது வோட சிலேற்பனம் பதுங்கிநிற்க நாடியானது அரணைவால்போல் துடிக்க அப்போது மெய்யில்வேர்வைவிட திரேகங் குவிந்ததாகில் மரணக்குறி யென்று அரிவீர்கள் எ-று. 51

எடுமிடியென்றுவீழும் மெழுமுடல்மயக்கிக்காட்டும்
புடையுருமூக்கின்கீழும் பொசித்திடுவேர்வையுண்டா

வடிவிழிமையமாகும் வாங்கிடும்விலாவிரெண்டும்
கடுகவேயிக்குணங்கள் காட்டிடில்மரணமாமே.

இ-ள். இடிபோலிடித்து நாடியானது விழுந்து உடலானது மயங்கி மூக்கின்கீழ் வேர்வையுண்டாகி விழியானது மறைந்து விலாரெண்டும் வலிக்கக் கண்டால் மரணம் எ-று. 52

நன்மையாம்வாதபித்தம் நாடிகளுடனேமாய்ந்து
வண்மையாசிலேற்றுமந்தான் வளர்துடியடியேபோல
திண்ணமாயுடனெழுந்து மார்பதுகுழிந்துதண்ணில்
அண்ணலாரரியச்சொன்னே மரிகுரித்தொண்ணூத்தாரே.

இ-ள். வாதபித்தநாடிகள் அடங்கி சிலேற்பன நாடியானது துடித்து அடிக்குமாகில் திரேகம் யெழும்பும் மார்பு குழியும் இவ்விதகுறிகள் தொண்ணூத்தாரென்றறிவீர்கள் எ-று. 53

ஆடியமஞ்சைகோழி அன்னம்போல்நடந்துவாதம்
நீடியஅட்டைபோல நின்றது தியங்கியோடிற்
கூடியகிழமையேழில் கொல்வதுதிண்ணமென்ன
நாடியபரமன்தானும் நயம்பெறவரிந்துசொன்னார்.

இ-ள். மஞ்சைகோழி அன்னம் இவைகளைப்போல ஓடின வாதமானது அட்டையைப்போல் தயங்கி ஓடில் கிழமையேழில் மரணமென்று பரமேஸ்வரன் பார்வதிக்குரைத்தனர் எ-று. 54

சொன்னமுன்னுமைதானட்டை துலங்கியபித்தநாடி
வன்னமாமறவுபோல வளர்ந்ததுபிரிந்தேயோடில்
என்னநாளேந்துமூன்றில் அறிந்துகொள்மரணமென்ன
இன்னமுமரிந்துசொன்னே மியம்பினர்கூர்புள்ளோரே.

இ-ள். ஆமை அட்டையைப்போல் ஒடிய பித்தநாடி பாம்பைப்போல் வளைந்து பிரிந்து ஓடுமாகில் ஐந்து அல்லது மூன்றுநாள் மரணமாம் எ-று. 55

கூத்தறித்தவளைபாம்பு குலவியநடைதன்போல
தோத்திரத்துரைத்துசொன்ன சிலேற்பனங்கோடிநாடி
போர்த்தொழில்திடமண்போல புடைந்ததுபிரியுமாகில்
ஊத்திரங்தோணித்தென்று மொறிக்கிலார்மாதமென்றார்.

இ-ள். தவளை பாம்பு நடைபோன்ற சிலேற்பன நாடியானது சண்டைபோடும் தன்மைபோல் பிரிந்து புடையக்கண்டால் ஒரு மாதத்தில் மரணம் எ-று. 56

மேதினியுள்ளோர்க்கெல்லாம்மெய்யிதுவுறைக்கலுற்றேன்
ஓதியவூளைசார்ந்து ஊண்டொடிநாவறண்டு
தீதிலாசிலேற்பநாடி செரிமியேயெழுந்துவீழும்
ஆதியானுரைத்தவுண்மை அடுத்தநாள்ரெண்டில்சாவே

இ-ள். இப்பூலோகத்தின்கண் யாவற்றுளும் நம்பும்படியாய் கூறுகின்றேன் யாதெனில் ஊளையானது சார்ந்து நாவானது வரண்டு இருக்குமாகில் சிலேற்பனநாடியானது செரிமியெழுந்து வீழுமாகில் பரமனுரைத்த வண்ணம் ரெண்டாநாள் மரணமாவார்கள் எ-று. 57

மெய்யதுபித்தம்நீங்கி வாய்வதுமிகுத்துகாட்டில்
அய்யமேலிட்டகன்று மடைத்திடுமிளைப்புமாறுங்
துய்யதோர்விழியுமந்தஞ் சோருமேநீரிடமேகத்தால்
அய்யனுருரைத்ததுண்மை அஞ்சாநாள்மரணந்தானே

இ-ள். பித்தமானது நீங்கி வாய்வானது மிகுத்து காட்டில் ஐயமேலிட்டு இளைப்புண்டாகி விழியுமந்தித்து

சொரிகி நீர்கோரில் ஐந்துநாள் மரணமென்று அறிய வும் எ-று. 58

திண்ணியவாதபித்தம் சிலேற்பனந்தொடர்ந்தசன்னி
இன்னமூன்குணங்கள்சொல்ல வியல்புடனிருந்துகேளாய்
பின்னியபாம்புபோல பிரந்துகானடந்தநாடி
தன்னியதவளைகத்தி தயங்கிடில்சாவுதானே.

இ-ள். வாதபித்தத்தினோடு சிலேற்பனம் தொடரு மாகில் ஜன்னிகாணும் பாம்பைப்போல் பிரண்டு நடந்த நாடியானது தவளைபோல மயங்கி நடக்குமாகின் மரண மென்று அறியவும் எ-று. 59

என்னவே வார்த்தைதன்னை யியல்புட ணிணங்கச் சொல்வேன், முன்முகமார்புபக்க மூக்குடன் செவிகண் டம், சென்னங்குளிர்ந்து சிலேற்பனம் சுருங்கச்செய்தல் சொன்ன நாளொன்றில் சாவால் தொகுத்தரிந் துரைத் திடாயே.

இ-ள். இன்னம் மரணக்குறியாதெனில், முகம்மார்பு பக்கம் மூக்கு காது கண்டம் இவைகளெல்லாம் குளிர்ந்து யிருக்க அதில் சிலேற்பனஞ்சேர்ந்து அறியவும் எ-று. 60

கண்டநொந்துந்திவீங்கி கண்சிவந்தளர்ச்சிதோன்றில்
அண்டமும்பொருமிவிம்மி அதைத்துடனிருக்குமென்ன
முண்டகமும்பொன்போல மூணுகதெரிந்துமூச்சி
தண்டிளந்தமேவில் சாவதுதிண்ணமென்ன.

இ-ள். கண்டமானது நொந்து உந்திவீங்கி கண்சிவ ந்து தளற்சிதோன்றி வயர்பொருமி, விம்மி முகம் பொன் னிறமாகி முன்மூஞ்சி வாங்கில், நாடியானது வீணை ஒணன்போல் நடக்க சாவது திண்ணம் எ-று. 61

சில்லெனசேகுடைந்து சிலேற்பனமதுவேதோன்றில்
சல்லெனசரீரம்வேர்த்து தானுடல்குடைந்துதோன்றில்
சொல்லதுகுளரிபேசி தூக்கமும்சுழன்றுவீழில்
செவ்விதன்பித்தத்தாலுன் தீர்ந்திடாரோகமென்றே.

இ-ள். சில்லென்றமெய்யி சிலேற்றை பனந்தோன்றி சீரம் வேர்த்து உடல் குளிர்ந்து சொல்லானது குளரி பேசி நித்திரை அதிகமாய் சுழன்று வீழில் தீராத பித்த ரோகமாம் எ-று. 62

மெய்யதோர்பகல்விரும்பி யிரவுதானுடலைமேவுச்
செய்யதோர்நாவிரண்டு சேற்றுமநாடிவோடித்
தொய்யவேசுவாசந்தானு மூடார்ந்தத்துவாங்குமாகில்
வெய்யகண்பரந்துதாவி விழிக்கில்நாளிரண்டில்சாவே.

இள் பகலில் விரும்பி இரவில் உடலைமேவி நாவ ரண்டு சிலேற்பனநாடி வோடில் மேற்சுவாச வாங்கு மாகிலும் கண்பரந்து தாவி விழிக்குமாகில் ரெண்டா நாள் மரணம் எ-று. 63

சாலவேவாதபித்தம் சிலேற்றுமந்தனித்தொன்றுகி
சாலவேபோஜனங்கள் சமைத்திடதாட்சிசெய்யும்
சாலவேசன்னிகோர்த்து தலைநொந்துவாய்திறக்கில்
சாலவேஅஸ்வத்திட்டந் தள்ளிதவில்லாதென்றே.

இ-ள். வாதம் பித்தம் சிலேத்துமம் தனித்து ஒன் றுகில் சாதமிரங்காது தாட்சிசெய்யும் அதின் சன்னி கோர்த்து தலைநொந்து வாய்திறக்கில் காற்றுனது நிற் காது எ-று. 64

கால்வளர்ந்துயருமூக்கிங் கருவிழிசிவந்திருக்கும்
மேல்விவித்தங்கந்தன்னி மிழிதனித்தொடிங்கிக்கண்ணீர்
சால்பெருத்துதிருவாய்வுந் தாள்கருத்திருக்குமிந்த
நால்வகைகுறியுஞ்சொன்னேம் நமனுயிர்கவருவாரே.

இ-ள். காலானதுவளரும் மூக்கானது உயர்ந்து காட்டும் கண் பார்வையானது மேல்நோக்கும் விழிக்கும் வாயானது கருத்திருக்கும் இவ்விதமாக நாலு குறிகளைக் கண்டால் மரணக்குறிக ளென்றறிவீர்கள் எ-று. 65

புருவமேவட்டமாகிப் புயமலிந்திருக்குஞ்சோனை
பருகிநீர்தாவும்போதப் பஞ்சிடும்கண்ணும்வாயும்
ம்ருவியகெற்பந்தானு மடந்துதானிருக்குமாகில்
வருகுமிக்குணங்களெல்லாம் மரணமென்றுரைக்கலாமே

இ-ள். புருவமானது வட்டமாகி திரேகத்தின்மீது மழைபோல் வேர்வைகண்டு கண்ணும் வாயும் பஞ்சடைந்து கெற்பமானது இரிக்கி இருக்குமாகில் மரணம் எ-று.

போர்விழிமிருண்டுநாளும் புனல்விழிந்தயர்நாளுஞ்
சீர்சூரவிழியிலெய்து தரித்திடாதேழுநாளில்
பார்விழிசாயும்நாவில் பயன்றதுகவையின்கூறும்
கூர்விழிநாசிவாசங் குறையுநாள்மூன்றில்சாவே.

இ-ள். விழியானது மெறண்டு அதில் நீரானதுவிழ கால் வீங்க இக்குறிகண்ட யேழாநாளில் நாக்கில் தித்திப்பு தோன்ற மூக்கில்வரும் சுவாசமானதுகுறைய நாள் மூன்றில் மரணம் எ-று. 67

போசன பொருத்தவிக்கல் பொருமுதல் புடைத்தல் சோர்தல், ஆசனங்குளிர்ந்துகூற லகங்கைகால் பெருத்தே வீங்கல், கோசமும் மேறல்வாங்கல் குளிர்ந்துபிற் குனியல்வாங்கல், நாசிவெண் கருவிவென்றே தவின்றுநீர் விட்டுப்போமே.

இ-ள். சாப்பிடும்போது விக்கலுண்டாகி திரேகங் குத்தலுடன் ஆசனமானது குளிர்ந்து கைகால் பெருத்து வீங்க கோஜமென்னும் விரையானது ஏரலுமிரங்கலுமாக விருக்க திரேகமாதியந்தமுங் குளிர்ச்சியாகக்காண மெய் யின்நிறம் வேறுபட நாடியானது மீட்டியைப்போலிடித்து வீணையைப்போல் தெரிக்க மருந்தீயாமல் விட்டுவிட வேண்டும் எ-று. 68

விட்டிடும் நீரடைத்தால் விழியிநீர் சிந்தச்சிந்தில்,
அட்டமுங் குளிர்ந்துகூத்த லகங்கைகால் பெருத்தே வீங்
கல், உட்டன பேர்வசித்தல் உதருதல் பிறப்புச்சேர்த்தல்,
திட்டமாஞ் சாவதிண்ணம் நாடியே கைதொடாதே.

இ-ள். சாதாரணமாக வருகின்ற நீரானது அடைத்துக்கொண்டு விழியில் நீரானதுகசிய திரேகம் குளிர்ந்து கைகால் பெருத்து வீங்க நாடியானது இடிபோல முழங்க மெய்நடுக்க முண்டாகி குளிர்ச்சியானது சேர மரணம் நிட்சயம் கைதொடக்கூடாது எ-று. 69

கைதொடில்புண்போல்நோகல் மருத்துடல்மழமழத்தல்
மெய்தொடில்திரேகம்நீலம் விழிதனில்சிகப்புபீளை
செய்மொழிகமலம்புந்தி சிறுமுகம்குருவேர்சிந்தல்
ஐவருமொடிங்கினித்தம் மாடுவாருடாதென்னே

இ-ள். கையைதொட்டு நாடிபார்க்கில் கையானது நொந்து திரேகமானது கருத்து மழமழப்புண்டாகி விழி நீலம்போல் அதில் செகப்பு பீளைபொருக மலை புந்தியிலும் முகத்திலும் வேர்வையானது கசிய ஐந்து பூதமு மொடுங்கி நாடியானது விழும் எ-று. 70

சிரமதுகருத்துநொந்து செவியடைத்திருமலாகி
சுரமதுவெகுவதாக சேரைபோற்சிறுநீர்வீழ்ந்து
சுரமதுசிதரிவீசி தாகமும்வெகுவதாகி
விரையவேவிழிதியுங்கி மீளாதுமிடையமென்றே.

இ-ள். தலைபானதுநொந்து கருத்து செவியடைந்து இருமல்கண்டு சுரமதிகரித்து சிறுநீரானதுசலங்கலாகவிழ சுவாசமானது அதிகரித்து தாகமுண்டாக கண்ணானது மயங்க இக்குறிகண்டால் மீளாது எ-று. 71

மருந்திடவிரும்பிடாதே மருபிறப்பிட்டுமேலும்
அழந்தாசிதங்கள்வீங்கி தாடியின்கீழேகட்டி
பரிந்துநீர்பெறவேவாங்கி பார்வையுமிரிதியானல்
மருந்திடவேண்டாம்நீயு மரணமென்றறிந்துகொள்ளே.

இ-ள். வயித்தியர்கள் பாவத்துக்குட்படாமல் காண வேண்டிய குறியாதெனில், வருத்த முண்டாகும்படி மெய் வீங்கி எலும்பின் கீழ்கட்டியுண்டாகி அதில் நீர்கசிந்து நேத்திரம் மத்திபமானல் இக்குறியுள்ளவர்களுக்கு மரிந்திடாமல் மரணமென்று சொல்லவும் எ-று. 72

மீன்றுவாய்வழுவழுத்து மேனியும்வெளுக்குமாகில்
தாண்டியபேச்சுதானும் சவண்டிடாகமட்டும்
மீண்டியமரணமாக யிரண்டரைகடிகையென்னே
கூண்டெனயிளைப்புகூடி குரைத்திடுமுயிரெனன்னே.

இ-ள். வாயானது குழகுழப்புண்டாகிமேனியானது வெளுத்து பேச்சானது மாறுபாடாக பேசில்யிரண்டரை நாழிகையில் மரணம் அத்துடன் இளைப்பு தோன்றில் முன்னதாகவே மரணமாகும் எ-று. 73

எந்ததோர் சுரமுள்ளோர்க்கு யிணங்கவே வேர்வை தோன்றில், வந்ததோர் பெருமூச்சுண்டாம் வாதநாடியு மேயானல், தீர்ந்ததுபிராணனென்று செப்பலாந் தெளிந்

தோரெல்லாங், காந்தளங்கையார் காமன் கரும்புவியில் பருவங்கண்ணீர்.

இ-ள். சுரமுள்ளவர்களுக்கு வேர்வையானது மீறி பெருமூச்சியுண்டாகில் வாதநாடியானது பிராணன் நில்லாதென்று சொல்லவும் காமன் வில்லைப்போல் புருவமுள்ள மாதேகேளும் எ-று. 74

மூந்தியேநாவுமெத்த கருப்பதாய்நாக்குமூக்குந்
தன்னிடக்குணமுமாரி தவ்வியகுணமுமிஞ்சல்
யெண்ணவேகுணமீதானல் யிதற்குநேரினிமைகூர்ந்து
உண்ணவேமருந்துயீந்தால் ஒழிந்ததுமரணமென்னே.

இ-ள். நாக்கும் மூக்கும் மெத்தகருத்து தன் குணமானதுமாரி வேறுகுணமுண்டாகி யிருக்குமாகில் அதற்கு தக்கமருந்து யிருந்தால் வியாதியானது பறந்து மரணம் நீங்கும் எ-று. 75

உண்டஊண்மெழியதாகில்ஊண்மிகச்செல்லாதாகில் கொண்டதோர் வாய்வுமெத்தி குடல்வலி யதிகமாகில், பண்டுபோல் மருந்துசெய்து பார்க்கவென் றெண்ணவேண்டாம், வண்டுசேர்குழலினுளே மரணமென் றிதனைச் சாற்றே.

இ-ள். சாப்பிடும்படியானவை செரிக்காமலும் சாதங்கொள்ளாமலும் வாய்வு அதிகரித்து உடல் வலிப்புண்டாகில் இக்குறிக்கு மருந்து செய்யவேண்டிய அவசியமில்லை தப்பாமல் மரணமாகும் எ-று. 76

சாலவேசலத்திறுடே தான்விந்துவிழுமேயாகில்
ஏலவார்குழலினுளே எழுநாளையிலேகொல்லும்
காலமேகதிரோன்றன்னில்கருதியதிங்கள்தானும்
மாலையிலில்லங்கன்று மாறிடில்மரணந்தானே.

இ-ள். சிருநீர் விடும்போது அத்துடன் விந்தானது விழுமாகில் காலமூர்த்தியில் சொல்லும் காலையிலுமாலை யிலும் வீட்டில் மாரிட மரணமுண்டாகும் எ-று, 77

தாமொருநாளுக்குநாள் தன்பலங்குறையுமானல்
மானுறுவதனந்தானும் மறவெளுத்திருக்குமானல்
குறைவறபெருமூச்சுண்டா யிருக்குமேமாதமொன்றில்
மரைவரமரணமென்று மர்மமாயுரைத்திடாயே.

இ-ள். நாளுக்குநாள் பலன் குறைந்து விந்தானது வெளுத்திருக்குமாகில் ஒரு மாதத்தில் பெருமூச்சியுண் டாகி மரணமாகும் எ-று. 78

மூதுகொடுவயறுவீங்கி மூலமும்தாதுகெட்டுச்
செதுசெவிகண்ணும்வாயுஞ் செதிரயப்பரிசிகுண்ணி
மூதுந்தனவாறுமூன்று முதியவன்கீழேயாகில்
விதியவன்வசமேதென்று விட்டுநீயகண்டிடாயே

இ-ள். முதுகும் வயறும் வீங்கி மூலமென்றுந் தாது கெட்டு செவியும் கண்ணும்வாயும் பார்க்கக்குன்றி அவன் மூன்றுவாரம் வியாதியாகயிருந்து மீளான் எ-று. 79

வத்தியமலஞ்ஜலங்கள் மாற்றுள்ளசெவிகண்நாசி
உத்தமோர்கன்னம்நாக்கு உரிதிகள்பலதுமத்தும்
இத்தனைகுணமுங்கெட்டு யிருந்தனவியல்புகண்டால்
பித்தகர்முன்புசென்று மீளாவதரிமைதானே.

இ-ள். மலஞ்சலஞ் செவிகண் நாசி கன்னம் நாக்கு இவை முதலானதுங் குணங்கெட்டு யிருக்குமாகில் மீள் வரிதாகும் எ-று. 80

பாங்குரியவத்தைதானே பண்ணவேடிலைசந்துநாறும்
எங்குரிசிலேற்பந்தானே யெழுதியமுடிச்சிவீழும்
ஓங்குறுசுழிகண்தானே உவண்டிடும்பலபேச்சாக
வங்குறிதுரியந்தானே தப்பிடும்வர்க்கந்தீர்ந்தே.

இ-ள். மலமானது நாரி சிலேற்பனமானது சிரசில் நிற்க கண்ணானது சுழுண்டு பேச்சு பலவிதமாகப் பேச இவ்வித குறிகளோடு கண்டால் மயக்கமென்றறிக எ-று.

நீதது அவத்தையஞ்சில் தெளிவுறுமுகடுபார்க்கும்
ஓதிய அவத்தையாறில் உடலதுகுழைத்துகாட்டும்
நீதிபோமவத்தையேழில் நினைவொத்து பொசிப்பேனென்
றும், ஆதியாறுரைத்தயெட்டி லதுகண்பஞ்சடையு
மென்றே.

இ-ள். மேற்கூறிய அவத்தையானது ஐந்தா நாளில் தெளிவுகொடுக்கும் ஆறுநாள் உடலானது குவிந்திருக்கும் ஏழாநாளில் புத்தியானது நூரி போஜனங்கொள்ளாது எட்டாநாளில் கண்பஞ்சடையும் எ-று. 82

கொண்டிடுமவத்தைகேளாய் கூர்விழிமூக்குகாது
ஒன்றொடியுட்சியுந்தி உள்ளங்கால்கைகளெங்கும்
விண்டிடவெளுத்துக்காட்டி மிக்கலும்சேற்பமென்றே
ஆண்டருமரியச்சொன்னோ மஞ்சுநாழிகையிற்சாவே.

இ-ள். அவத்தையானது விவிழி மூக்குகாதுஉச்சிஉந்தி உள்ளங்கால் கைகள் முதலானது வெளுத்துக்காட்டும் விக்கலும் சேற்பமுண்டாகில் ஐந்து நாழிகையில் மரணமாகும் எ-று. 83

தன்னுடைய சாய்கைதானுந் தனக்கது தோன்றாதாகில், முன்னுரையறிதல் கேழ்க்கல் முயன்றுரைப்பதற்குவந்து, என்னதென்றறிதலேங்கி யிளப்புடன் சிகப்பு தோன்றில், சொர்ணம்போல் வதனமெய்யுந் தோன்றிற்றே சாவுதானே.

இ-ள். தன்னுடைய சாய்கை தனக்கு தோன்றாமல் யொருவர் சொல்லியதுகேட்டு பதில்சொல்லமரியாதியாகி இளப்புதோன்றி மனம் திகைத்து வாயும் திரேகமும் பொன்னிறமாகத் தோன்றில் மரணம் எ-று. 84

இரண்டதாருண்டுமேலே பொருமிநீர்கடக்குமாகில்
புரண்டதுநாள்கள்சென்று யியம்பினர்மரணமென்றே
கரண்டமென்குழலினுளே சுரத்தினுலெட்டதாகும்
திரண்டநாள்வந்ததென்று சிக்கெனதெரிந்துகொள்ளே.

இ-ள். ஒரு ஆண்டுத்தொடங்கி நீரானது யேரியிரங்குமாகில் இரண்டுநாளில் மரணமென்று சொல்லவும் அதோடு சுரங்காணில் எட்டுநாளில் சாவாம் இப்படி இறந்தநாள் வந்து முடிந்ததென்று அறியும் எ-று. 85

அரிந்திடாபித்தம்நின்று வாதஞ்சேத்துமமுமங்கே
பிரிந்திடாதோடுமாகில் பேயவெண்மாதேகேளாய்
நிறைந்ததோராகமத்தின் நேர்படவொத்தேவோடில்
மரந்திடதடிகைத்தொண்ணூ றளவினில்மரணமாமே.

இ-ள் பித்தமானது நின்று வாதமும் சிலேற்பணமும் அதின்கூடே ஓரிடத்தில்வோடில் தொண்ணூறு கடிகையில் மரணமாவார் எ-று. 86

வேறு.

சேருமுகுருமூங் கண்டோங்குஞ்
சேர அதைக்குங் கைகால்கள்
உருமுள்ளுண்டே நெஞ்சுழலும்
உள்ளசேற்றுமங் கோதண்டம்

இ-ள். உமிழ்நீரானது வாயில் அதிகரிக்கும் கைகால்கள் அதைக்கும் இருமல்காணும் நெஞ்சுழலும் சேர்ப்பனத்தின் குணம் எ-று. 87

நீருமிகுத்தொழுங் கண்சிவக்கும்
நேரேயிருக்க வோடாது
பாருங்கிரிகை குணங்கண்டால்
பரமன்மிட மாட்டானே.

இ-ள். சிருநீரானது மிகுத்துவிழும் கண்ணானது சிவக்கும் நீரானது நேராகவோடாது இந்த குணங்களைக் கண்டால் தேறமாட்டான் எ-று. 88

எடுக்கும்பதிக்கும் யெழுந்திருக்கும்
இடத்தேமூரசு மிகவுண்டு
வகுப்போர்நிமரு விழிரெண்டு
வரவேவிழிக்கும் வழிபார்த்தே.

இ-ள். எடுத்து எடுத்துப்போடும் படுக்கும் எழுந்திருக்கும் மூர்ச்சியாகும் விழியானது ரெண்டும் குவடு போல் நிமரும் விழித்துவிழித்து வழிபார்க்கும் எ-று. 89

தொடுக்குஞ்சோற்று மிகவெழுந்தே
தொன்றையதனில் நின்றுழலும்
அடுத்தஅடுத்தகாழி யென்றறிந்தோம்
அகலப்போகக் கடவீரே.

இ-ள். சிலேற்பனம் மிகுத்து யெழும்பி தொண்டையில் நிற்கும் இந்தக்குறியோனை அடிக்கடி பார்த்துக் கொள்ளவும் எ-று. 90

காலுங்கையும் புரவீங்கி கண்டஞ்சேர்ந்து நாவரண்டு, மேலுங்சனத்தே இளப்பேற்றி மிகுந்ததாக முண்டாகி தோலுந்தசையும் படபடென்று தய்யநெஞ்சுங் குளிந்திடிகில், மாலும்பிர்மாவந்தாலு வரிக்குமிளைப்பதரிதாமே

இ-ள். காலுங்கையும் புரமாகவீங்கும் நெஞ்சானது சோர்ந்து நாவுவரளும் கன்னமானது வெளுத்து மிகுத்த தாகமுண்டாகி தோலும் எலும்பும் படபடவென்று துடி

த்து நெஞ்சு குளிர்ந்து இருக்கில் இவ்விதகுறியானே
மாலும் பிரமா ருத்திரன் வந்து தடுத்தாலும் பிழைப்பதரி
தாகும் எ-று. 91

ஊசிபோல் முகமுநொந்து உடம்பெல்லா நரம்பு
தோன்றில், பாசிபோல் நாவுங்கண்ணும் பரணமும்வெளு
ப்பதாகில், கூசிடவேண்டாமிந்த குணங்களுண்டானபோ
து, காசதுவேண்டாமென்று கடக்கென விட்டுப்போகே.

இ-ள். ஊசியில் குத்துவதுபோல் முகம் நொந்து
திரேகமாதியந்தமும் நரம்பு தோன்றில் பாசி படர்ந்தது
போல கண்ணும் நாசியும் வெளுத்து இவ்விதகுறிகள்கண்
டால் கடைசியில் சாவது திண்ணமென்றுசொல்லி பாபத்
துக் குள்படவேண்டாம் எ-று. 92

தீதிலாவுடல்வெளுக்குந் திரவியபத்திற்சாவாம்
நீதிலாவேதஞ்சொன்ன மறைவிதிபடியேமுன்னோர்
பேதிலாகண்டநீதி பெருமையாய் ஆய்ந்துகொண்டு
மூதுலாமானிடற்கு முறையிதென்றோதுநூலே.

இ-ள். உடலானது வெளுக்குமாகில் பத்தாநாள் சா
வாம் ஆதியாகிய வேதத்தின்படி பரமசிவன் பார்வதிக்கு
உரைத்தவண்ணம் அகிலத்தின்மீது மானிடர்க்கு உதவி
யாகிய நூலிது எ-று. 93

பரமசிவன் பார்வதிக்குபதேசித்த

வைத்தியநாமுறை

ச ம் பூ ர் ண ம்.

உ

சண்முகன் துணை.

பரமசிவன் பார்வதிக்குபதேசித்த

அவிழ்த முறை

—(*)—

பித்தத்திற்கு கியாழம்.

தனியா	படி	௨
எலுமிச்சயிலை	பலம்	10
அவத்திகீரை	கைபிடி	2

இந்த மூன்றும் கொண்டுவந்து இலைரெண்டையும் உரலிலிட்டு இடித்து தனியாவுடன் கலந்து ஒரு மண் பாத்திரத்திலிட்டு அதில் நல்லஜலம் மூன்றுபடி விட்டு அடுப்பேற்றி அரைபடிக்கு சுண்டக்காய்ச்சி இறக்கி வைத்துக்கொண்டு

(உள்ளுக்கு சாப்பிடும் முறை)

மேற்படி கியாழத்தை ஆறுபாகமாக்கி காலை மாலை மூன்றுநாள் சாப்பிடவும்.

(தீரும் வியாதிகள்)

சகலமான பித்தமும் தீரும் பத்தியமில்லை.

(பித்த சுரத்திற்கு கியாழம்)

வட்டத்திருப்பி பலம் ௨ நெலவேம்பு பலம் ௨
மயிலிறகு பலம் முக்கால்

இதுகளெல்லாம் சாம்பலாக்கி மூக்கால்படி ஜலம் விடவும்.

சுக்கு	பலம் வ	சன்ருஷ்டம்	பலம் வ
அதிமதுரம்	,, வ	அக்ராகாரம்	,, வ
ஏலக்காதோல்	,, $3/4$	கொட்டை திராட்சை	வ

கடுக்கா 2-உடைத்து தோல் யெடுத்துக் கொள்ளவும் இதுகளை நரிக்கி கியாழத்தில் கொட்டி காச்சவும் வ-படி சலத்துக் கிரக்கவும் மூணுய்பகுத்து காலே மாலே சாப்பிடவும் இச்சாபத்தியம்.

(தீரும் வியாதி)

பித்தசுரம் நாவரட்சி கைகால் குத்தல் திரேகத்தில் வேர்வை விடுதல் இதுகள் நிற்கும்.

பித்கசுரம் வாத சுரத்துக்கு கியாழம்.

இஞ்சி	பலம் 1	திராட்சை	பலம் 2
எலிமிச்சம் பழம்	,, 1	தேன்	,, 1

இஞ்சிதோல் போக்கி பில்லே பில்லேயாக அருத்து காரமில்லாத மண் பாத்திரத்தை அடுப்பில் வைத்து அருத்தயிஞ்சி திராட்சைப்பழம் இரண்டையும் சட்டியில் போட்டு எலுமிச்சம்பழம் ரசம்விட்டு வருத்து சிவந்து வரும்பொழுது தேன்விட்டு சாப்பிடவும் பித்தசுரம் வாத சுரம் தணியும்.

பேதிக்கிக் கியாழம்.

நெலாவரை கடுக்கா கடுகுருணி சுக்கு மிளகு வகை 1-க்கு அரைபலமாக மேற்படி தினுசுகளை கரிக்கி மூன்ருழாக்கு தண்ணீர் வார்த்து யெறித்து முக்காலாழாக்கு ஜலமிறக்கி இந்துப்பு முக்காபலம் போட்டு சாப்பிடவும் பத்தியமில்லே.

கெற்பச் சூடுதணிய கியாழம்.

வெள்ளை வங்காயம்	பலம்	5	செம்பருத்தியிலை	பலம்	5
வில்வ இலை	,,	5	விளா இலை	,,	5
துத்தி இலை	,,	5	கீழாநெல்லி இலை	,,	5
வெந்தியம்	,,	5			

இந்த ஏழு தினுசுகளை ஒன்ருய்சேர்த்து உரலில் போட்டு இடித்து ஒரு மண் பாத்திரத்தை அடுப்பின் பேரில் வைத்து இடித்த சரக்கை அடுப்பின்பேரில்வைத்த சட்டியில்போட்டு 2-படி ஜலம்விட்டு காய்ச்சி 1-படிக்கி இறக்கவும் சாப்பிடும் விபரம் காலை மாலை காலாழாக்கு சாப்பிடவும் பத்தியமில்லை தீரும் வியாதி கெற்பச்சூடு தணிவு வாய் புண்ணூரல் திரேகபுஷ்டி.

சீதபேதிக்கு மருந்து,

பசரக்கீரை இடித்து சார்பிழிந்து வெல்லம்போட்டு சாப்பிடவும் சீத பேதிக்கு நிற்கும்.

சீதபேதிக்கு.

ஒருபிடி மிளகு கொண்டுவந்து எருமை தயிரில் இராத்திரிக்கு ஊரப்போட்டு காலையில் மிளகை மைபோலரைத்து கோப்பையில் போட்டு கால்பலம் நெய்விட்டு குழம்பாகக் கலக்கி மெழுகுபோல்செய்து சக்கரை போட்டு சாப்பிடவும் சீதபேதிகட்டும்.

சீதபேதிக்கு.

சுக்குபலம் 1, மிளகு பலம் ½, கரிவேப்பிலை பலம் ½ கடுக்கா பலம் 1, இவைகளாலும் இடித்து தூள் செய்து பசும் வெண்ணெயில் குழைத்து சாப்பிடவும் சீதபேதி ரெத்தபேதி தீரும்.

வாதசுரம் தீர கியாழம்.

அரத்தை	பலம் வ	சதகுப்பி	பலம் வ
சுக்கு	,, வ		

இம்மூன்றும் இடித்து வஸ்திரகாயம் செய்து கால் படி ஜலம்விட்டு அரிக்காலாழாக்கு சுண்டக்காய்ச்சி இறக்கும்போது நொச்சியிலை ஒருபிடி கொண்டுவந்து வதக்கி இடித்து சாறுபிழிந்து மேற்படி கியாழத்தில் விட்டிறக்கி காலை மாலை சாப்பிடவும். இப்படி 3-நாள் ஆறுவேளை சாப்பிடவும் தீரும் வியாதி.

கைகால் குத்தல், சுரம் வயர் மந்தம் இதுகள்தீரும். கத்திரிபிஞ்சி அவரை முருங்கப்பிஞ்சி இதுகள் கூட்டவும்.

பித்தசுர கியாழம்.

பாவட்டை	பலம் 1	சித்தாமுட்டி	பலம் 1
ஓமம்	,, 1	வேலிப்பருத்திவேர்	,, 1
மிளகு	,, 1		

இவைகளையெல்லாம் சேர்த்து இடித்து வ படி ஜலம் விட்டு அரிக்காலாழாக்கு இறக்கி காலை மாலையாக சாப்பிட்டுவர தீரும் வியாதி.

கைகாலெரிவு நெஞ்சு கரிக்கல் நாவரட்சி பித்த கிறு கிருப்பு சுரம் முதலானவை நீங்கும் புதினு புளியாரை பிரண்டை மேற்படி பதார்த்தங்களும் சேர்த்துக் கொள்ளலாம்.

சிலேத்தும சுரத்துக்கு கியாழம்.

திப்பிலி	பலம் 1	சுக்கு	பலம் 1
சித்திரத்தை	,, 1	ஓமம்	,, 1
கண்டங்கத்திரி	,, 1	ஆடாதொடை	,, 1

இவைகளையெல்லாம் கல்லுரலிலிட்டு பஞ்சுபோல் நசிக்கி 1-படி ஜலம்விட்டு நாலில் ஒருபங்காய் காய்ச்சி இறக்கி ஆறுவேளையாக பாகித்து சாப்பிடவும் சாப்பிடும் போது காய்ச்சின தேன் 5, 6-துளிவிட்டு சாப்பிடவும் சூப்பு முதலானதுடன் நெய் சுண்டைவத்தல் முழுது வரை இச்சாபத்தியமாக யிருக்கவும்.

நீர் அடைப்புக்கு கியாழம்.

பசரையிலை	பிடி 1	கத்திரியிலை	பிடி 1

சதைத்து கியாழமிட்டு இறக்கும்போது நெருப்பி லிட்டு ஊதிய வெங்காரப்பொடி துட்டிடைபோட்டு இற க்கி சாப்பிடவும் நீர்கட்டி உடனே வாங்கும்

அல்லது

படிகாரம் 1-பலம் கொண்டுவந்து எரிகிற நெருப்பி லிட்டு பொங்கவைத்தால் சாதம் கொதிப்பதுபோல கொ தித்து சோளபொறிபோல் பூர்த்துநின்ற பிறகெடுத்து கல வத்திலிட்டு பொடித்துக்கொண்டு நான்கு பாகமாக்கி வைத்துக்கொண்டு புளித்த பசுமோர் வ-படியில் போட்டு கலக்கி சாப்பிடவும். உடனே ஒரு பூள்ளாங்கி கிழங்கு தின்னவும் தாராளமாக நீர் இறங்கும் நீர்சுருக்கு நீர் கடு ப்பு வெகு சீக்கிரத்தில் வாங்கும் இப்படி நாலுபாகத்தை யும் சாப்பிட வெள்ளையிருந்தாலும் நீங்கிவிடும்.

விரைவாதம் தீரக் கியாழம்.

புனல் முருங்கைவித்து.	பலம்	முக்கால்
கெச்சக்காய்ப்பருப்பு	பலம்	முக்கால்
கொத்தான்யிலை	பலம்	முக்கால்
சுக்கு	பலம்	முக்கால்

இவைகளையெல்லா மிடித்து கியாழமிட்டிறக்கி சாப்பிடும்போது அரிக்கால் ரூபாயிடை சந்தண அத்தர்விட்டு சாப்பிடவும் இப்படி ஆறுவேளை சாப்பிடவும்.

தீரும் வியாதி.

விரைவீக்கம் விரைநோய் நரம்பு இழுப்பு இவை நீங்கும்.

இதுவும் விரைவாதத்திற்கு மசால்வடை.

கெச்சக்காய் பருப்பு 6-எடுத்து அம்மியில் வைத்து கோழிமுட்டை வெள்ளை அம்பிலிவிட்டு அறைத்து வடைபோலதட்டி அந்த ஒருவடைக்கி போதுமான சித்தாமணக்கெண்ணை சட்டியில் ஊத்தி இந்த வடைபோட்டு வேகவைத்து யெடுத்து இந்த வடையைதின்று அதே எண்ணையில் ஒருகரண்டி சாப்பிடவும். 5, 6-தகுதி பேதியாகும் இப்படி 3-நாள் சாப்பிடவும்.

தீரும் வியாதி.

விரைவாதம் நீங்கும் சில வாய்வுகள் கைகால்களில் குத்தல் குடைச்சல் இவை நீங்கும் இச்சாபத்திய மிருக்கவும்.

வயிற்று நோய்க்கும் வயிற்று கிருமிகட்கும்

கியாழம்.

பிரண்டை	பலம் $1\frac{1}{4}$	வேப்பம்யீர்க்கு	பலம் $1\frac{1}{4}$
புரசைவித்து	,, $1\frac{1}{4}$		

இவைகளைக் கொண்டுவந்து இடித்து கியாழமிட்டு நன்றாய் காய்ந்தபிறகு பசும்பால் படிவீசம் சீனி கற்கண்டு பொடிநாலு சிட்டிகை சித்தாமணக் கெண்ணை பத்து துளிவிட்டு யிறக்கி சாப்பிடவும் 4, 5-விசை பேதி யாவதுடன் வயிற்றுப்பூச்சிகள் வெளிப்படும் வயறு நோய் தீரும்.

அண்டவாத சாந்திப்பொடி.

கருவளையல் பொடிசெய்து வஸ்திரகாயஞ் செய்து மிளகுபொடி 1-பலம் சேர்த்து அதிற்பாதிபிடை பெருங் காயங்கூட்டி பிரண்டை கியாழத்தினுல் 2-சாமம் அறைத்து பில்லைதட்டி நிழலில் உலர்த்தி மறுநாளெடுத்துபொடித்து தேன்விட்டு பிசைந்து கெச்சக்காய் பிரமாணம் உருண்டைசெய்து 3, 5, 7-நாள் காலையில் சாப்பிடவும்.

உட்காச்சல் பிரமியம் மேகத்திற்கு சாந்தி

பேயன் வாழைப்பழம் 40

சர்க்கரை	பலம் 1 0	சீரகம்	பலம் ½
உலந்த இஞ்சித்தூள் 5		பரங்கிசக்கைத்தூள் 25	
தேன்	2½		

இவை யெல்லாம் ஒன்ருகப்பிசைந்து வெய்யலில் 1 நாள்வைத்து மறுநாள் முன்னைக்காயளவு சாப்பிடவும் இப்படி காலை மாலை 40-நாள் தின்னவும்.

மேகம் அணுகாது உட்காச்சல் இவைநீங்கும் வாய்வான பண்டங்கள் நீக்கி போஜனம் செய்யவும் ஸ்திரீ போகம் லாகிரி வஸ்து கூடாது.

ரெத்த பித்தந்தீரக் குடிநீர்.

ஆடாதொடையிலை	பிடி	1
பச்சைதிராட்சப்பழம்	பிடி	1

இரண்டும் கசக்கிப்போட்டு கிழாழமிட்டு இரக்கும்போது திப்பிலித்தூள் துட்டிடைபோட்டு சாப்பிட சாந்தியாகும்.

இருமல் உப்பிசந்திரப்பொடி.

சுக்கு	பலம்	திப்பிலி	¼	பலம்
மிளகு	,,	கடுகு	¼	,,
நெல்லிக்கால்	,,	தான்றிக்காய்	¼	,,
கடுக்காய்	,,	இந்துப்பு	¼	,,
சிறுதேக்கு	,,	கண்டந்திப்பிலி	¼	,,
சடாமாஞ்சி	,,			

இவைகளை கொண்டுவந்து யிடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு இஞ்சி சுரசத்திலாவது தேனிலாவது திருகடிப் பிரமாணம் போட்டு குழைத்து சாப்பிடவும் இப்படி அந்திசந்தி ரெண்டு வேளையாக 15 நாள் சாப்பிடவும்.

தீரும் வியாதி.

குத்திக் குத்திக்கொண்டிருக்கும் இருமல் வயிர் உப்பிசம் இவை நீங்கும் பத்தியம்.

கரியுப்பு கிளுவை உளுவை குரவை கத்திரி முருங்கை அவரை இதுகளின்பிஞ்சு நெய்கூட்டி சாப்பிடவும் அதிக தீபனமும் உண்டாகும்.

ஈளையிருமல் சுவாசத்திற்கு கிருதம்.

தூதுவேளைபழரசம்	திட்டிடை
ஆவின்நெய்	,,

நற்சீரகம் விராகனிடை	1	கருஞ்சீரகம் விராகனி		1
சுக்கு ,,	1	திப்பிலி	,,	1
மிளகு ,,	1			

இவைகளையெல்லாம் நன்ருய்ப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து மேற்படி பால் நெய்பழரசம் இதுகளுடன் குழைத்து சாப்பிட நீங்கும்.

பிள்ளைகட்குவரும், சுரத்திற்கும் குளிருக்கும் மருந்து.

முதியார் கூந்தல் வேறை வென்னீர் விட்டறைத்து கொஞ்சம் சர்க்கரையிட்டு பிசைந்துகொடுக்க நீங்கும்.

அஜீரணத்திற்கு குழம்பு.

வெள்ளைக் காக்கணும்வேர் மிளகு இரண்டும் வென்னீர்விட்டறைத்து தேனில் மத்தித்து உண்ண அஜீரணம் வெகுசீக்கிரம் நீங்கும்.

மொலாம்.

லிங்கம்	வ	பலம்	பூரம்	வ	பலம்
முதார்சிங்கு	வ	பலம்			

இந்தமூன்று தினுசை மைபோலறைத்து படிகாரம் காலரிக்காபலம்! கட்ட நெருப்பில் வைத்து பொங்கின பிறகு சூரணத்துடன் வைத்து நான்கையு மைபோலறைத்து பசும்வெண்ணை ஒருபலம்போட்டு நெகிழ அறைத்து ஒருபரணியில் வழித்துக்கொள்ளவும் கடுக்கா காசிகட்டி தினுசு ஒன்றுக்கு கால்பலம் கொண்டுவந்து யிடித்து ஒரு பாத்திரத்தில் ஒருபடி தண்ணீர்விட்டு யிந்த தூளை கொட்டிகாய்ச்சி அரைபடி சலத்துக்குயிரக்கி ரணத்தைக்கழுவி இந்த முலாணைபோடவும் ஆராதரணம் ஆறும்.

தந்தவியாதிக்குப் பொடி.

எருக்கம்பழுப்பு 50 கொண்டுவந்து அம்மியை சுத்தி செய்துவிட்டு பழுப்பை அம்மியில்வைத்து கட்டியாய் நெகிழ அரைத்து உண்டைசெய்து வெள்ளைமல் துண்டால் இரண்டு மூன்று.உரைசுத்தி சாணியை கட்டியாக பிசைந்து துணி;தெரியாமல்பூசி வெய்யலில் காயவைக்கவும் காய்ந்தபிறகு கட்டை புடம்போட்டு தணிந்த பிறகு

துணியை பிரித்தெரிந்து விட்டு ஒரு பாத்திரத்தில் எருக் கம்பாலைக்கொண்டுவந்து அம்மியில் சூரணத்தை வைத்து பாலைவிட்டு நெகிழவரைத்து பில்லை தட்டி வெய்யலில் காயவைத்து பானை வோட்டை யிரண்டு பில்லை நரிக்கி ஒரு பில்லையின்பேரில் மருந்தைவைத்து மற்றொரு பில்லை யின் பேரில் மருந்தைவைத்து மற்றொரு பில்லை மேல் மூடி மூன்றுவரட்டியில் புடம்போடவும் போட்ட சூர ணத்தை ஒருடப்பியில் வைக்கவும்.

மூடக்கத்தான் வேர் பலம்	5	கடுக்காதோல்பலம்	1
கரிவேலம்பட்டை	5	மயில் துத்தம்	5

இதுகளை கட்டியாய் மைபோலரைத்து லேசாகபில்லை போல் தட்டி வெய்யலில் காயவைத்து ஒருவரட்டியில் சுட்டு எருக்கம்பழுப்பு சூரணத்துடன் சேர்த்து காலை மாலை பல்தேய்க்கவும் தீரும்வியாதி,

பல்நோய் பல்லில் ரெத்தம் வருதல் பல்லில் புழுவிழு தல் பல் சொத்தை விழாமை தந்த வியாதிகளுக்கு சஞ் சீவி யென்றறியவும்.

மகோத ரசாந்திக்கு சாறு

பேய் பீர்க்கங்காய் பச்சையாய் கொண்டுவந் திடித் துப் பிழிந்தசாறு உழக்கு பெருங்காயம் கடுகு உலர்த்த இஞ்சித்தூள் இவை வகைக்கி 1-களஞ்சி போட்டு மூன்று நாளுண்ண சவுக்கியத்தைக் கொடுக்கும் வியாதி பலக் காது.

கிரந்தி சூலை புண் வயற்றுவலி வாய்வு இதுகட்கு பெரும்பாடுதீர நெய்.

நாவல்பட்டை 5-பலம் ஒதியம்பட்டை 5 பலம் இர ண்டுங் கொண்டிடித்து தக்கின நீர்விட்டு கியாழமிட்டு அதி

மதுரத்திற்கு பசும்பால் விட்டரைத்து அதிற்கரைத்து காய்ச்சி வடிகட்டி காலேமாலே யுண்டுவர ஸ்திரீகளின் பெரும்பாடு மிக்க சாந்தியாம்.

நீர்கழிச்சலுக்கு கட்டுவாதி.

வெள்ளே குண்டுமணிபருப்பு 2-பலம்.

புளியங்கொட்டை தோல் 2-பலம்.

இவை ரெண்டையுங் கொண்டுவந்து பொடியாக மைபோலரைத்தெடுத்து ஒருகளஞ்சி எருமை வெண்ணே யில் கெச்சக்காய்பிரமாணம் மேற்படி மருந்தைப்போட்டு பிசைந்து சாப்பிட நீரொழுக்கு சாந்தியாகும்.

காதிரைச்சலுக்கு தைலம்.

எருக்கன்யிலேசார்	ரெண்டரைபலம்
எள்ளண்ணே	ரெண்டரைபலம்

ஒன்றுபடித்தி அடுப்பிலிட்டு

உள்ளி விராகனி	2½	கோஷ்டம் வராகனி	2½
வசம்பு ,,	2½	திப்பிலி ,,	2½
சுக்கு ,,	2½	இந்துப்பு ,,	2½
கோரைகிழங்கு,,	2½		

இவையெல்லா மிடித்துப்போட்டு காய்ச்சி வைத்துக்கொண்டு 2-துளிவிட்டால் காதிரைச்சல் நீங்கும்.

பெரும்பாட்டுக்கு

முக்காவேளே வேரின்பட்டையைக் கொண்டுவந்து அரைத்து மூன்று கெச்சக்காய் பிரமாணமெடுத்து பச்சரிசி கழுநீரில் கலக்கி சாப்பிடவும்.

ஓடு குன்மத்திற்கு பொடி.

குப்பைமேனி சமூலம்	பலம்	5
செருப்படை கையான்	பலம்	5
தகரை	பலம்	5

இவை மூன்றும் நிழலிலுலர்த்தி பொடித்து வைத்துக்கொண்டு திருகடிப்பிரமாணம் தேனில் குழைத்துத்தின்னவும் இப்படி அந்திசந்தி 20-நாள் 40-நாள்சாப்பிடவும் வாய்வு பண்டங்களாகாதென்றறிக.

நீர்கடுப்பிற்கு மருந்து.

கோரைக்கிழங்கு ஆவாரம்விறை
தேத்தான்வித்து புளியங்கொட்டைதோல்

இவையெல்லாம் இளநீர்விட்டரைத்து ராத்திரியில் பனியில்வைத்து காலையிலெடுத்து சாப்பிடவும் இப்படி 3 நாள்கொள்ளத் தீரும்.

பிள்ளை பெற்றவர்களுக்கு வயிற்றில் தங்கிய அழுக்கு நீங்க மருந்து.

சுக்கு	பலம்	2	வெள்ளை வங்காயம் பலம்	2
மிளகு		2	சித்திரமூலம்	2

இவைகளை யெல்லாமிடித்து நாலிலொன்றாய் கியாழமிட்டிரக்கி சாப்பிடவும் இப்படி 3-நாள் கொள்ளவும்.

சரப்பான் ரிணங்களுக்கு எண்ணெய்.

செங்கத்தாரிப்பட்டை பிடி	1
சிறிகுறிஞ்சான்வேர்	1
சிறிசின்னியிலை	1

மிளகுபலம் அரை விளக்கெண்ணை பலம் 8 எண்ணைவிட்டே இவைகளை யரைத்து எண்ணையில் கரைத்து அடுப்பேற்றி மெழுகு பதமாய்க்காய்ச்சி சிரு கரண்டிவிதம் 7-9-நாள் கொடுக்கவும் கடும் பத்தியமதாய் கார்க்கவும்.

வாய்வு கிராணிதீர நத்தையெண்ணை.

நத்தைச்சதை 2 பலம் சுக்கு மிளகு திப்பிலி ஓமம் சீரகம் காயம் கடுகுருணி இந்துப்பு இவை வகைக்கி இரண்டரை விராகனிடை சூரணித்து திருபலை கியாழத்திலரைத்து 12-பலம் எண்ணையில் கரைத்துமேற்படி நத்தை சதையும்போட்டு மெழுகு பதமாய்க்காய்ச்சி யிரக்கி சிறுகரண்டி விதம் 35-நாள் சாப்பிடவும்.

கரப்பான் வியாதிக்கும் ரணத்திற்கு உள்ளுக்கும். மேலுக்கும் எண்ணை.

கருநொச்சியிலை பிடி	1	சாணுக்கி பிடி	1
சிறுகுரிஞ்சான்	1	சிவகரந்தையிலை	1
சின்னிபிலை	1		

விளக்கெண்ணை 1-பலத்தில் இவையாவும் அரைத்துக் கரைத்து.

வசம்பு அரைபலம் பூண்டு அரைபலம்
கடுகுருணி அரைபலம்

பொடித்துப்போட்டு காய்ச்சி யிருக்கும்போது ரசகற்பூரம் 2-விராகனிடை எண்ணைவிட்டரைத்து கலக்கி யிரக்கவும் உள்ளுக்கு கரண்டிவிதம் கொடுத்து மேலுக்கும் பூசிவர எவ்வித சிரங்கும் ஆறிவிடும்.

சகல ரோகத்திற்கும் எண்ணெ.

பெருமலைச்சார் படி அரை வல்லாரியிலைச்சார் படி அரை வெங்காயச்சார் படி அரை கத்தாழை மடல்சார் அரை ஆகாஷத்தாமரைசார் படி அரை.

வகைக்கு அரைபடி சார்பிழிந்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும் ஒரு யேனத்தை அடுப்பில் வைத்து இந்த சாருகளையூத்தி அரைவீசை விளக்கெண்ணெயை சாற்றுடன் வூத்தி கிளறிக்கொண்டே யிருக்கவும் எண்ணெ பதமாய் வரும்பொழுது யிரச்கவும் உள்ளுக்கு 2-பலம் எண்ணெ சாப்பிடவும் பத்தியம் இச்சாபத்தியம் சகலவியாதியும் போகும்.

பேதிக்கி எண்ணெ,

சுக்கு	பலம்	ஒன்று	சித்திரத்தை	பலம்	ஒன்று
பாக்கு	,,	ஒன்று	மிளகு	,,	ஒன்று
கடுகுறுணி	,,	அரை	கடுக்காய்	,,	இரண்டு
இந்துப்பு	,,	அரை			

இவையெல்லாம் தூள்செய்து கியாழஞ் செய்து யிருத்து வடிகட்டி சித்தாமணக்கெண்ணெ 1-பலம் விட்டு சாப்பிடவும் யிச்சாபத்தியம்.

தீரும் வியாதி

சுரத்துக்கு பித்தசாந்தி யிடுப்பு வாய்வு நீங்கும் குளிர்ச்சி யெண்ணெ.

எளனீர்	2	எலிமிச்சம்பழம்	10
வால்மிளகு பலம்	வ	ஏலரிசி பலம்	வ
பனங்கற்கண்டு	8	விளக்கெண்ணெ வீசை	வ

மண்பாத்திரத்தை அடுப்பில்வைத்து இளநீர்சாற்றை விட்டு எலிமிச்சம்பழ ரசத்தைவிட்டு வால்மிளகு.

இலைகள்ளிவேர் பட்டையை உலர்த்தியிடித்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு பிரதிதினம் காலையில் துட்டிடை பொடியெடுத்து தேன்விட்டி ழைத்து சாப்பிட வாய்வு யாவும் தீருவதுடன் எலி முதலான சில விஷங்கள் தீரும் இச்சாபத்தியம்.

பெரும்விக்கலுக்கு மருந்து.

திப்பிலி	விராகனிடை	எட்டு
சீரகம்	,,	பத்து

இரண்டும் சூரணித்து தேனில் குழைத்து தின்ன உடனே மாறும்

ஏலரிசி ரெண்டையும் பொடித்துப்போட்டு பனங்கற்கண்டை கொட்டி எண்ணையையூத்தி கிளரி பதத்தில் இறக்கவும் 1-பலம் எண்ணை சாப்பிடவும் இச்சாபத்தியம் தீரும் வியாதி.

நீர்சுருக்கு ரத்தகடுப்பு பித்தசாந்தி உயிர்கிலே புண் பெரும் போக்குவயத்துவலி இவைகள் தீரும்.

ராட்சத சூரணம்.

இந்துப்பு பொட்டிலுப்பு கல்லுப்பு கரியுப்பு வெடிவுப்பு வகைக்கு விராகனிடை இரண்டரை

வாய்விளங்கம் பலம் 1		கருஞ்சீரகம் 1பலம்
ஓமம்	பலம் $\frac{1}{2}$	

இவையெல்லா மிடித்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகிரித்தி அவ்விடைச் சமனிடை இரண்டம்பட்டை சூரணம் சேர்த்து வைத்துக்கொண்டு காலையில் திருகடி சூரணமெடுத்து தேன் நெய் இதுகளை ரெண்டுங்கலந்து குழைத்து சாப்பிடவும் பத்தியம் செங்கீரைத்தண்டு துவரை நெத்திலி சுரா இவைகளாகும்-வாதத்தினல் வந்த குத்தல் குடைச்சல் தீர் சூரணம்,

சொரிசிரங்கிற்கும் சூலைக்கும் எண்ணெ.

ஜாதிலிங்கம் பலம் 3	வெள்ளருகு பலம் 3

அவ்விரண்டும் சூரணித்து 1-பலம் சூரணத்திற்கு 5-பலம் எண்ணெகலந்து காச்சி கரண்டிவிகிதம் சாப்பிட்டுவர சொரிசிரங்கு தீரும்.

அரையாப்புதீர எண்ணெய்.

கொடிவேலிவேர் விராக	2½	வித்து விராக	2½
வசம்பு ,,	2½	காயம் ,,	2½
உன்னி ,,	2½	துருசு ,,	2½

இவைகளை சூரணித்து 1-பலம் எண்ணெயில் கலந்து காய்ச்சி துட்டிடையாக உண்டுவரில் அரையாப்பு சூலை சிரங்கிதீரும்.

பெருமூத்திர பசுமோர்.

தேற்றான்விரை பலம் வ	ஆவாரம் விரை பலம் வ
விலாம்பிசினி வ	கடுக்காய்

இந்த நான்கையும் போட்டிடித்து பசுமோரிற் கலந்து சாப்பிட மூத்திரப்பெருக்கு நிற்கும் இப்படி 3-நாள் கொள்ளவும்.

பல்வலிதீரக் கியாழம்.

மருக்காளை பலம்	5	சுக்கு பலம்	5
மருதப்பட்டை	5	வெள்வேலம்பட்டை	5
எருக்கின்சமூலம்	5	ஆவாரம்பட்டை	5

இவையெல்லாமிடித்து கியாழமிட்டு குருகக்காச்சி யிறக்கி வாய்பொறுக்கும் சூட்டுபதத்தில் கொப்பளிக்கவும் 5-5-வேளை கொப்பளிக்கவும் பல்வலி தீரும்.

5

பித்தம் 40-தீர தலைமுழுகும் தைலம்.

நல்லெண்ணை படி அரை நெல்லிச்சாறு உழக்கு
பசும்பால் உழக்கு முசுமுசுக்கைச்சாறு உழக்கு
சிந்தில்சாறு உழக்கு பொன்னுங்கணிச்சாறு உழக்கு

இவையெல்லாம் சேர்த்து எண்ணையிற்கலந்து முத்தக்காசு அதிமதுரம் ஏலம் சடாமாஞ்சி செண்பகம் கிராம்பு சந்தணதூள் வகைக்கி விராகனிடை 2-பொடித்துப்போட்டு காய்ச்சி தலைமுழுகிவர பித்தம் நாற்பதுந்தீரும்.

மேற்படி பித்தத்திற்கு சூரணம்.

மதுரம்	பலம் 2	கோஷ்டம்	பலம் 2
ஏலம்	2	சடாமாஞ்சில்	2
சந்தணம்	2	கிராம்பு	2
தாளிசப்பத்திரி	2	சீரகம்	2
சுக்கு	2	திப்பிலி	2
கோரைக்கிழங்கு	2	நெல்விமுள்ளி	2

இவைகளையெல்லா மிடித்து வஸ்திரகாயஞ் செய்து அவ்விடைக்கு சமன் வெண்சக்கரை கலந்து சீசாவில் வைத்துக்கொண்டு காலைமாலை திருகடிகுப் பிரமாணம் 50-நாள் கொள்ளவும்.

மூலநோய் யாவுந்தீர சூரணம்.

வாழைக்குருத்தின் உலர்ந்தது 2வபலம்.

காட்டுக்கருணை	பலம் 2வ	கரிக்கருணை	பலம் 2வ
புளிக்கருணை	2வ	காராக்கருணை	2வ
சித்திரைமூலம்	2வ	மருடகிழங்கு	2வ
புளியாரை	2வ		

இவையெல்லாம் சூரணித்து எருமைப்பாலில் பிட்டிட்டு வெடுத்து அவ்விடையிற்பாதி சக்கரை கலந்து வைத்துக்கொண்டு 0-நாள் காலை மாலையுங் திருகடிப் பிரமாணம் சாப்பிடவும்.

கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிக்கெல்லாம்

சூ ர ண ம்.

கண்டங்கத்திரி பலம்	1	மெருமெருந்து பலம்	1
சுக்கு	1	செங்கத்தாரி	1
இருசீரகம்	1	திருகடுகு	1
கற்சங்கம்	1	அரத்தை	1
விளங்கம்	1	பரிங்கி	1

இவைகளையெல்லாம் சூரணித்து அந்திசந்தி திருகடுக் கொண்டு இச்சாபத்திய மிருக்கவும்.

வாதம் எண்பதுக்கு சூரணம்.

சித்திரைமூலம்	மாவிலங்கம்	சரக்கொன்றை
முருங்கை	சங்கு	வெள்ளருகு
மலைவேம்பு	எருக்கன்பழுப்பு	சுக்கு
திப்பிலி	பேரீச்சங்காய்	பஞ்சவர்ணம்

இவைகளை யெல்லாம் வகைக்கு 2-பலமாக கொண்டிடித்து காலிலொருபங்கு சக்கரைகலந்து அந்திசந்தி திருகடி சாப்பிடவும்.

கவிசை பெருவயறுதீர பேய் துமிட்டி

எண்ணெய்.

மாவிலிங்கப்பட்டை		கொன்றைக்கொழுந்து
காயம்		காட்டாமணக்கம்துவித்து
அவுரி	சின்னி	கொத்தான்
பேய்துமட்டிக்காய்		வெள்ளைக்காக்கணம்வேர்

கழற்சிவித்து	வேலிப்பருத்தி	வசம்பு
மஞ்சள்	சித்திரைமூலம்	பிரண்டை

இவைகளெல்லாம் வகைக்கு அரிக்கால் பலம்.

இந்துப்பு	பொட்டிலுப்பு	வளையலுப்பு
கரியுப்பு	கல்லுப்பு	வெண்காரம்
சவுக்காரம்	சீன்காரம் படிகாரம்	நவாசாரம்

இவைகளெல்லாம் வகைக்கு விராகனிடை 2-இவை யாவும் பொடித்து சூரணித்து 15 பலம் விளக்கெண் ணெயில் கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய்க் காய்ச்சி வடித்து பிரதிதினம் காலையில் துட்டிடைகொள்ளவும் பத்தியம் இறைச்சி சூப்பு மான்கரி அரைக்கீரை சிறு கீறை துத்திக்கீரை கத்திரிப்பிஞ்சு முருங்கப்பிஞ்சு அவ ரை துவரை நெய் பால் இவைகளாகும் 6-7 நாள் எண் ணைசாப்பிட்டு அதற்கு சரிநாள் சென்று தலைமுழுகவும் நாற்பதுநாள் வரையிலும் இச்சாபத்தியமாக இருப்பது டன் புகை ஸ்ரீபோகம் லாகிரி இவைகள் கூடாதென் றறிக

இரத்தமேகந்தீர தாளிச்ச சூரணம்.

தாளிச்சபத்திரி	6	கழஞ்சி	திருகடுகு	2	கழஞ்சி
ஏலம்	6	கழஞ்சி	லவங்கம்	5	கழஞ்சி

இவைகளெல்லாம் கல்லுரலிலிட்டு யிடித்து வஸ்திரகாய ஞ்செய்து 12 கழஞ்சி சக்கரைகூட்டி காலைமாலை சாப் பிடவும்.

கண்ணோய் 93-க்கும் தலைமுழுக தயிலம்.

பொன்னாங்கண்ணி	எலும்பிச்சம்பழம்	முந்தக்காசு
சிந்தில்தண்டு	சிறுகீரை	செண்பகப்பூ
பூநாகம்	மதுரம்	ஏலம்
கோஷ்டம்	செங்கழுநீர்பூ	தும்பைப்பூ

இதுகள் வகைக்கி 1 பலம் சேகரித்துப் போட்டிடித்து வெண்மிளகு ரெண்டரைபலம் சூரணித்துப்போட்டு பத்துபலம் நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி சீசாவிலடக்கி கார்க்கடைத்து குப்பைமோட்டில் 40-நாள் புதைத்துவைத்தெடுத்து நாலுநாள் வட்டமாக முழுகிவரில் கண்ணோய்யாவும்நீக்குவதன்றி எப்பொழுதும்அணுகாது.

கண்டமாலைக்கு மேற்பூசுந் தயிலம்.

வேப்பெண்ணெ	உள்ளி	வெம்பாடம்பட்டை
கற்கிரந்தி	கெந்தி	சூதம்
துருசு	துத்தம்	குங்கிலியம்
தாரம்	முதார்சிங்கு	

இவைகள் வகைக்கி விராகனிடை எடுத்து மேற்படி எண்ணெவிட்டே யரைத்து கரைத்து சூரியபுடம் வைத்தெடுத்து கோழியிரகினுல் தடவிக்கொண்டு வரவும் தீரும் அன்றியும் எவ்வித சிரங்கிற்கும் தடவலாம்

சிலவிஷங்கட்கு குடிநீர்.

தூதுவேளை	நாரத்தை	நொச்சியிலை
சின்னி	சிறுசின்னி	மலைநன்னரி
பிரமிகழற்சி	கடுக்காய்	சுக்கு

இவையெல்லாம் போட்டிடித்து கியாழமிட்டு இருவேளையும் மூன்று நாளுண்ண சிலவிஷங்கள் தீரும் கடும்பத்தியம்.

கணத்தெண்ணெ.

மருள்கிழங்கு உள்ளி

இவைகளையெல்லாம் வகைக்கு 1-பலமாக எலுமிச்சம்பழச்சார் விட்டறைத்து பின்னக்காயளவுக்கு உழக்

கெண்ணெவார்த்து காய்ச்சி கரண்டிவிதம் கொடுக்கவும் தேங்காய்மாங்காய் மாவினுல் செய்த பண்டங்கள் வாய்வு முதலான தாகாது.

கணத்திற்கு சூரியபுட வெண்ணெய்

மாஞ்சில் முத்தம் சீந்தில் சிறுகாஞ்சொரி

இவைகளெல்லாம் வகைக்கு ரெண்டரைபலம் சூரணித்து சூரணத்திற்கு ஏழரைபலம் விளக்கெண்ணெயில் கலந்து மூனுநாள் சூரியபுடம்வைத்து பிரகெடுத்து சிறுகரண்டிவிதம் ஐந்துநாள் கொடுக்கவும் பத்தியம் மேற்கண்டபடி இச்சாபத்திய மிருக்கவும்.

கைகாலில் பித்தவெடிகண்டால் மருந்து.

மருதம் இலையை ஒருபிடி கொண்டுவந்து பசும்பால் விட்டரைத்து பின்னக்காயளவெடுத்து கால்படி பசும் பாலில் கரைத்து போசனம் செய்தபிறகு சாப்பிடவும் மூனு ஐந்துநாள் சாப்பிட சுவஸ்தப்படும்.

நீரில் இரத்தம் கண்டால் மருந்து.

பச்சரிசி விரலியிலை இரண்டும் சமன்கொண்டு எருமைப்பால் விட்டரைத்து பின்னக்காயளவெடுத்து தேற்ருன்வித்து சூரணம் கழற்சிக்காயளவு கலந்து பிசைந்து இருவேளையும் மூன்றுநாள் சாப்பிடவும்.

முழங்கால் வாதத்திற்கு கட்டடம்.

விழிதியிலை எள்ளுபுண்ணாக்கு ஆவாரையிலை சமன் கொண்டு கொஞ்சம் வெள்ளுள்ளி கலந்து யிடித்து விளக்கெண்ணெயில் வதைக்கி கட்டவும் இப்படி மூன்று நாள் பகலில் ஒருகட்டு யிரவில் ஒருகட்டு கட்டவுந்தீரும்

சளிகோழைக்கு பிரண்டைரசம்.

பிரண்டையை கொண்டுவந்து கும்பிசாம்பலில் வதக்கி சாறுபிழிந்து திட்டிடை சாறு உள்ளங்கையில் வார்த்து ஒரு சிட்டிக்கை வெள்ளை சர்க்கரைபோட்டு சாப்பிடவும் இப்படி இருவேளையும் மூன்றுநாளுண்ண தீரும்.

பிள்ளை பெற்றவர்களுக்கு சீழுதிரம் கட்டினால் மருந்து.

வாழை மரத்தின் குருத்தை கொண்டுவந்து சுட்டு சாம்பலாக்கி பனைவெட்டு சமன்போட்டு பிசைந்து பாக்களவாக இருவேளையும் சாப்பிட மூணு நாலுவிசை வலமுங்கழியும் வியாதியும் தீரும்.

சுக ஜன்னிக்கு நெய்.

பூதலைநெய் அரைபலங் கொண்டுவந்து இரும்புக்கரண்டியிலிட்டு உரிக்கி சுடுகையாகத்தானே உச்சியில் விட சுகஜன்னி பித்தல் பினத்தல் விகாரம் இவைவிட்டோடும்.

சூட்டினால் கண்ட வெள்ளைக்கு மருந்து.

ஒன்றேகால் கழஞ்சிபிடை வெண்காரத்தை நெருப்பிலிட்டு பொரித்துக்கொண்டு பசும்வெண்ணையில் கலந்துண்ணவும் மூன்றுநாள் இருபோதும் சாப்பிட நீங்கும்.

சிறுநீறு இறங்க மருந்து.

முடக்கொத்தான் இலை ஒருபலம் வெள்ளைப் பூண்டு அரைபலம் இரண்டும் அரைத்து காலையில் சாப்பிடவும் இப்படி மூன்றுநாள் கொள்ள தாராளமாய் நீரிறங்கும்.

சங்கம்வேர் 5-பலம் பூவரசம்பட்டை 5-பலம் சிவன் வேம்பு 5-பலம் வாலுளுவையரிசி 5-பலம்.

இவையெல்லாம் கல்லுரலிலிட்டு இடித்து தகுந்த நீர்விட்டு பிசைந்து குழித்தயிலமிறக்கி ஒருபலம் தயிலத்திற்கு ஒரு விராகனிடை மூத்திரசிங்கு இழைத்து உள்ளுக்கும் கொடுத்து மேலுக்குப்பூச சகலமேக புண்களும் ஆரும் இச்சாபத்தியம்.

எச்சல் தழும்பு படர்தாமரை படைக்கு பூசு மருந்து.

பூவரசம் பட்டையை எலுமிச்சம்பழ ரசத்தினால் அறைத்து தடவினால் கொப்பளித்து விஷநீர்வடிந்து மாறிவிடும்.

தலைவலிக்கு சுருக்கு தயிலம்.

எட்டிக்கொழுந்து இரண்டுபிடி மிளகு அரைபலம் அத்துடன் தட்டிப்போட்டு நல்லெண்ணை கால்படியில் கலந்து காய்ச்சி வைத்துக்கொண்டு நாலுநாள் வட்டமாக முழுகிவரில் நெடுநாளாயுள்ள தலைவலி நாலாவட்டத்தில் சுவஸ்தமாகும் தலை முழுகும் தினத்தில் பகலில் நித்திரை செய்யாதிருக்கவும் இச்சாபத்தியம்.

நாக்கிலும் உதட்டிலும் உண்டாகும் புண்களுக்கு குளிர்ச்சி வெண்ணை.

பசும்பால் ½-படி சித்தாமணக்கெண்ணை ½-படி

இரண்டும் கலந்து அடுப்பிலேற்றி வெந்தியம் வெங்காயம் மயிர்மாணிக்க மூலிகை வகைக்கு நாலுபலம் அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு காலையில் கரண்டிவீதம் சாப்பிட்டுவர மூலச்சூடு தணிந்து புண்கள் ஆறும்.

மேகம் சகல பீனிசம் கபாலக்குத்து மேககாங்கை இவைகட்கு தயிலம்.

கரத்தொட்டிசாறு	வ படி	முசுமுசுக்கைசாறு	வ படி
கரப்பான்பூண்டு	வ படி	நொச்சி	வ படி
சுறுகாஞ்சொரி	வ படி	தருவூமத்தை	வ படி
கஞ்சாயிலைசார்	வ படி	எருக்கம்பருப்பு	வ படி
இஞ்சிச்சாறு	வ படி	நல்லெண்ணை	காலேவீசம்

வெள்ளாட்டுப்பால் காலே வீசம்.

இவையெல்லாம் ஒன்ருய்கலந்து பத்துநாள் சூரிய புடம்வைத்து பதினோராநாள் திருகடுகு கோஷ்டம் அக்கிராகாரம் கருஞ்சீரகம் ஓமம் குருசானியோமம் சாம்பிராணி பூலாங்கிழங்கு வகைக்கு விராகனிடை ஒன்று வெள்ளாட்டுப் பாலிலரைத்து கலந்து காய்ச்சி வடித்து முழுகிவரில் மேகம் உதரம் சகல பீனிஸம் கபாலச்சூடு குத்துசயம் மேககாங்கை இவைகள் நீங்கும் சுட்டபுளி வருத்த உப்பு கூட்டவும்.

பீனிசத்தைலம்.

கஞ்சாயிலைச்சாறு $\frac{1}{2}$ படி நல்லெண்ணை $\frac{1}{2}$ படி

இவையெல்லாம் ஒன்ருய்க்கலந்து அத்துடன் மிளகு ஒண்ணரைபலம் அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து முழுகிவர சகல பீனிசமுந்தீரும்.

இவைகட்கு பசும்பால் தைலம்.

பசும்பால்	ஒரு படி	நெல்லிச்சாறு	வ படி
பொன்னுங்கணிசாறு	வ படி	கத்தாழமடல்	வ படி
செவ்விளநீர்	வ படி	சிறுகீரைசாறு	வ படி

நல்லெண்ணெய் ஒண்ணரைபடி எல்லா மொன்ருய் கலந்து.

மதுரம் விராகனி	2	கோஷ்டம் விராகனிடை	2
ஏலம் ,,	2	குரோசாணி ,,	2
பூலாக்கிழங்கு	2	கஸ்தூரிமஞ்சள்	2
சடாமாஞ்சில்	2	சீரகம்	2
ஜாதிப்பத்திரி	2	ஜாதிக்காய்	2
திருபலாதி	2	சோம்பு	2
வால்மிளகு	5		

ஆவின்பாலாட்டி எண்ணெயிற் கலந்து காய்ச்சி வடித்து முழுகிவர அந்திமாலை நேத்திரநோய் 96-பித்த வெட்டை பித்தவாய்வு அஸ்திவெட்டை உடம்பெரிவு கைகால் காந்தல் உஷ்ணரோய் தீரும் இச்சாபத்தியம்.

குழந்தைகட்கு பேதி.

ஈருள்ளி இண்டங்கொழுந்து கடுக்காத்தோல் இவைகளை சிதைத்து எண்ணெய் போட்டெறித்து சிறுகுழந்தைகட்கு ஒரு சங்கு கொடுக்க நன்ருய் பேதியாகும் கிருமிகள் விழும்,

நாக்குப் பூச்சிகள் விழ.

ஓமம் புரசைவித்து வேப்பீர்க்கு பிரண்டை இவைகளை சமையிடைகொண்டு வெள்ளாட்டுநீரில் கியாழஞ் செய்து வடிகட்டி ஒருபாலாடைகொடுக்க கிருமிகள் பந்தாய்விழும்.

பெரியோர்களுக்கு மலக்கட்டுநீங்க சூரணம்.

கருவேப்பிலைதூளும் வல்லாரியிலை தூளும் சமமா எடுத்து தேனில் குழைத்து இரவில் போசனஞ்செய்த பிறகு சாப்பிட்டுவரவும் காலையில் மலம் தாராளமாயுதையும் நாளுக்குநாள் வாய்வுநீங்கும்.

பிள்ளைகள் வாய்வு உப்பிசம் மலக்கட்டு இவைகட்கு பூபதி மாத்திரை.

இரசம் விராகனிடை	1	சுக்கு விராகனிடை	1
வெண்காரம் ,,	1	வெந்தயம் ,,	1
நேர்வாளம் ,,	1	நான்கு ,,	1

இவைகளை சுத்திசெய்து குளிர்ந்த நீர்விட்டு அரைத்து பாசிப்பருப்பளவாய் மாத்திரை செய்து ஒரு மாத்திரையெடுத்து வெந்நீரிலுரைத்துகொடுக்க ஊதுமாந்தம் பொருமல் வாதம் இவைகள் நீங்கும் பத்தியமில்லை.

அமிர்த சஞ்சீவிக் குழம்பு.

சாதிலிங்கம் விராகனி	2	வெண்காரம் விராகனி	1
ஆமணக்கன் பருப்பு	2	வாளம் ,,	4

இவைகளை சுத்திசெய்து அரைத்து குன்றிப் பிரமாணம் குளிர்ந்த தண்ணீரில்கொடுக்க பேதியாகும் வெந்நீர் கொடுக்க பேதிகட்டும்.

இதுவும் பிள்ளைகட்கு செண்பக மாத்திரை.

செண்பகப்பூ விராகனி	1	ஏலம் விராகனி	1
லவங்கம் ,,	1	திப்பிலி ,,	1
சுத்தித்தவாளம் ,,	5		

வெந்நீர் விட்டறைத்து கால் கழஞ்சியிடை மாத்திரைசெய்து தேனிலாவது சுக்கு கியாழத்திலாவது கொடுக்க பேதியாகும்.

சாம்பல் மண் தின்னுகின்ற குழந்தைகட்கு மருந்து

கீழாநெல்லிவேர் விராக	1	கடுக்காதோல் விராக	1
மிளகு ,,	3.		

புளித்தமோரில் அரைத்து கல்க்கி சங்களவு மூன்று நாள் கொடுக்க தீரும். திரும்ப மண் முதலானவை தின்னாது.

கக்குவானுக்கு வேறு மருந்து.

மயிலிறகு சாம்பலும் மிளகு சாம்பலும் சமனாய்ச் சேர்த்துப்பொடித்து ஆவின் நெய்யில் மத்தித்து கழற்சிக்காயளவு கொடுக்க தீரும்,

குழந்தைகளுக்கு விறைவாதம் கண்டால் மருந்து.

ஒரு கோழிமுட்டை வெள்ளைக்கருவில் ஒரு கெச்சக்காய் பருப்பு உடைத்துப்போட்டு ஒரு விராகனிடை சித்தா மூட்டிலையும் அறைத்துப்போட்டு மூன்றுநாள் பொருத்து கொடுக்கத்தீரும்.

இதுவுமது விரைவாத யெண்ணை.

சுக்கு எலுமிச்சங்காயளவு	திப்பிலி எலுமிச்சங்காயளவு
மிளகு ,,	வசம்பு ,,
ஓமம் ,,	வெள்ளுள்ளி ,,
கெச்சக்காய் பருப்பு	வேப்பங்கொழுந்து

இதுகளெல்லாம் அறைத்து ஒருபடி விளக்கெண்ணையில் போட்டு கரைத்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து சிறுகரண்டி வீதம் காலையில் கொடுத்துவர நீங்கும் 5, 7, 11-ம் நாள் கொடுக்கவும். வாய்வு பண்டங்கள் நீங்கி போசனமளிக்கவும்.

பிள்ளைகள் பல்லில் இரத்தம் வடிதலுக்கு மருந்து.

பச்சை நன்னாரிவேரைக் கொண்டுவந்து வெந்நீர் விட்டறைத்து கொட்டைப்பாக்களவு கொடுக்கவும். 1-நாளைக்கு 3-விசையாக காலை உச்சி மாலை இப்படி நிற்கிற வரையில் கொடுக்கவும்.

பிள்ளைகள் காதில் ஈபுகுர்தால் மருந்து.

குப்பமேனி இலையில் சிறுநீர்விட்டு சதைத்துகாதில் பிழிய ஈ செத்து வெளியில்வரும்.

சகலகாச்சலுக்கு பச்சைகற்பூர மாத்திரை.

பச்சைகற்பூரம்	2 விராக	லவங்கப்பட்டை	2 விராக
ஜாதிக்காய்	2 விராக	வாளம்	4 விராக

குமரிச்சாற்றாலரைத்து உளுந்து பிரமாணம் மாத்திரைச்செய்து சக்கரையில் ஒரு குளிகைவிட ஒன்றே முக்கால் நாழிகையில் விரோசனமாகி காச்சல் நிற்கும்.

கணச்சூடு தணிய எண்ணெய்,

சித்தாமணக்கெண்ணை அரைபடி வல்லாரைசாறு கால்படி வெந்தயம்.

ஆவின்பாலிலரைத்து கலக்கி பதமாய்க் காய்ச்சிவடித்து சக்கரைகலந்து கரண்டிவிதம் கொடுக்கவும கணச்சூடு தணியும்.

சதையடைப்புக்கு மருந்து.

முற்றின கோழியின் குடலிலிருக்கும் சிறுகல்லும் வெள்ளரி யிலையும் பூநு கரும்பு வெல்லமும் வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்தரைத்து ஆவின் பாலில் கலக்கிக்கொடுக்கத் தீரும் இப்படி ஆறுநாள் கொடுக்கவும்.

பிள்ளை சகலகழிச்சலுக்கும் உருண்டை.

சாதிக்காய்	ஜாபத்திரி	லவங்கம்
ஏலம்	அதிமதுரம்	அதிவிடையம
அபின் கஞ்சா	குரோசானி	கோரைக்கிழங்கு
வெந்தியம் சீரகம்	மாதளம்பிஞ்சு	வாழைப்பூ

இவையெல்லா மிடித்து ஆவின்பாலில் பிட்டவியல் அவித்தெடுத்து வாழைப்பூ சாற்றிலாவது மாதளம்பழச் சாற்றிலாவது அரைத்து மிளகுபோ லுருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு மாத்திரையை பொடித்து சக்கரையில் கலந்து கொடுக்கவும் இப்படி அந்திசந்தி கொடுக்க நீங்கும்.

பிள்ளைகள் மலக்கட்டுக்கு விரோசனப்பொடி.

இலைங்கள்ளிவேர்பட்டை	5 பலம்	மிளகு	$1\frac{1}{2}$ பலம்
உள்ளி	$1\frac{1}{2}$ பலம்	கடுக்காய்	$1\frac{1}{2}$ பலம்

இவைகளை இரவில் காயவைத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு குழந்தைகள் பெலமறிந்து முலைப்பாலி லல்லது வெந்நீரில் ஒரு காசெடை போட்டு குலிக்கி வார்க்க விரோசனமாகும்.

கண்புகைச்சல் காதுமந்தம் கண்டைகுடைச்சல் இவைக்குத் தைலம்.

வெட்டிவேர் தாள் 10-பலம் 4-படி ஜலத்தில் போட்டு கொழுமிட்டு அரைபடியாய்க் காய்ச்சி யிரக்கி நல்லெண்ணெய் முக்கால்படி கூடவிட்டு அதிமதுரம் தேசாவரம் கடுக்காய் கஸ்தூரிமஞ்சள் வகைக்கு அரைபலம் இவைகளைப் பொடித்துப்போட்டு காய்ச்சி முழுகிவர பீனிசம் மண்டை குடைச்சல் நீர்கோவை கண் புகைச்சல் காதுமந்தம் தேகயெரிவு காந்தல் இவைதீரும் இச்சா பத்தியம்.

சகலசுரத்திற்கும் மாத்திரை.

ஆடுதின்னாப் பாளைவேரை நிழலிலுலர்த்தி கருவாய்ப்பட்டை சமன்கூட்டி பொடித்து வஸ்திரகாயஞ் செய்து எலுமிச்சம் பழசாத்தாலாட்டி பரித்துக் கொட்டை பிரமாணம் மாத்திரைசெய்து இஞ்சி சுரசம் தேன் இதுகளில் கொடுக்க நீங்கும்.

கணம் இருமல் வாய்காற்றத்திற்கு கிழாழம்.

மனத்தக்காளி ஒருபிடி வெந்தியம் ஒருபலம்சுருள்ளி மூன்று பலம் துட்டிடை இவை பொன்னிறமாய் வறுத்து ஒருபடி தண்ணீர்விட்டு காய்ச்சி எட்டொன்றுய்க் காய்ச்சி வடித்து மூன்றுவேளை கொடுக்கத் தீரும்.

மண்டை பீனிசுக்குப் புகை.

லிங்கம் விராகனிடை 1 அத்திப்பட்டை பலம் ½

இவைரெண்டையும் நிழலுலர்த்தாக உலர்த்திப் பொடிசெய்து வைத்துக்கொண்டு சுங்கானில் கொஞ்சம் போட்டு புளியன் பட்டையை கொளுத்தி அந்த நெருப்பை சுங்கானில் போட்டு இம்முறையாக ஐந்துநாள் பிடிக்க மண்டை பீனிசு தீரும்.

கல்லடைப்பு மருந்து.

நூள்ளிலவம்	1 பலம்	நாவல்கொழுந்து	1 பலம்
பூலா	1 பலம்	வெட்பூலா	1 பலம்
மூத்தக்காசு	1 பலம்	நன்னாரி	1 பலம்
மூல்லி	1 பலம்	சீந்தில்	1 பலம்
செந்தாமரை	1 பலம்	சித்தாமுட்டி	1 பலம்
செங்கழுநீர்	1 பலம்	சிறுகீரை	1 பலம்
விராலி	1 பலம்	வெட்டிவேர்	1 பலம்
விலாமிச்சம்வேர்	1 பலம்	பொன்னாங்கணி	1 பலம்

காலுபடி இளநீரில் போட்டு அரைபடி கியாழமாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி கொடுக்கத்தீரும்.

சகலமேக எண்ணெய்.

சித்தாமணக்கன் முத்தை ஒருநாள் இளநீரில் ஊர வைத்து மறுநாள் அரிசி கழுவிய தண்ணியில் வேக வைத்து உலர்த்தி ஆவரைவேர் கியாழத்தில் கரைத்துக்காய்ச்சி பிழிந்தயெண்ணையும் பெரும் பூசினிக்காய்ச் சாறு தென்னம் பூசாண் வகைக்கி படி நன்னாரிவேர் 5-பலம் யெடுத்திடித்து 4 படி தண்ணியிற்போட்டு கியாழமிட்டு அரைபடி கியாழமாக யிரக்கி மேற்படி மருந்துடன் கலந்து காய்ச்சி வடித்துகட்டின ரசகற்பூரம் விராகனிடை 8 கோரோசனை விராகனிடை 2 இரண்டும் கலவத்திலிட்டு மேற்படி யெண்ணெய்வார்த்து 2 ஜாமம் அரைத்து கரைத்து கலக்கி வைத்துக்கொண்டு தேகபலமறிந்து கால் அல்லது அரைவீசம்படி கொடுக்

கவும் உப்பு புளி நீக்கி பத்தியம் வைக்கவும் மேகசூலே வெட்டை அஸ்திசூடு பிரமேகம் மேகச்சொரி சிரங்கு முதலானதும் தீரும்.

சகல மேகத்திற்கும் எண்ணெய்.

விளக்கெண்ணை ½ படி. பெரும் பூசினிக்காய்ச்சாறு 1 படி ஈரவெங்காயசாறு ½ படி எலுமிச்சம் பழச்சாறு ½ படி ஒன்ருய்க் கலந்துகொண்டு வெந்தியம் 1 பலம் அரைத்து அதில்கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து வேளை யொன்றுக்கு கரண்டிவிதம் சாப்பிட்டு வர சகலமேகமும் வைசூரிவெட்டை பிரமேகம் மூலங் கள் அணுகாது நெடுநாளை நீர்கட்டு அக்கினிமந்தம் இவைதீரும்

மேக வாய்வுக்கு வெள்ளி பஸ்பம்.

சொக்க வெள்ளியாவது ரூபா வெள்ளியாவது கால் ரூபாயிடை எடுத்து ஈருளத வாழமரத்தடியில் சொரிகி வைத்த வெள்ளியின்மேல் முட்டை முட்டையாக கிள ப்பியிருக்கும் அதைக்கொண்டுவந்து ப்பைமேனி சார் விட்டு அரைத்து பில்லேதட்டி வெய்யலில் வைத்து காய் ந்தபிறகு மண் அகலே ரெண்டுகொண்டு வந்து ஒரு அகலில் பில்லேயைவைத்து மேல் ஒரு அகலே மூடி சீலே யில் மண்பூசி கவசம்செய்து 10 வராட்டியில் புடம்போ டவும் சுன்னமாகும் அதை கலவத்திலிட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும்.

உள்ளுக்கு சாப்பிடுமுறை.

வேளை யொன்றுக்கு அரிசியிடை பசும்வெண்ணையில் குழைத்து காலேமாலே 5 நாள் சாப்பிடவும்

தீரும் வியாதிகள்.

அரையாப்பு கொருக்கு கைகால் பிடிப்புடன் 20 மே கமுந்தீரும் பத்தியம் இச்சாபத்தியம் 7 நாள் ஓமஸ்நா னம் 9-நாள் எள்ளெண்ணை ஸ்தானம் செய்யவேண்டும்.

ஊஷ்ணபேதிக்கு கரியுப்பு.

கரியுப்பு ¼ பலம் துத்திவேர்பட்டை 7-பலம்
அதின்சமூலம் 3 பலம்

இவைகளைக்கொண்டுவந்து வேர்பட்டையும் இலையும் வெவ்வேருக உரலிலிட்டு யிடித்து பிறகு வெளாங்காய்பிரமாணம் மண்குடுவை கொண்டுவந்து யிடித்த வேரையும் யிலையையும் ஐந்துபாகமாக்கி ஒருபாகம்வேரில் பாதிகுடுவையில்போட்டு பிறகு உப்பை மத்தியில் வைத்து அதின்மேல் இலையையும் போட்டு குடுவைமேல் ஒரு ஓட்டுபில்லைமூடி சீலையில் மண்கவசம்செய்து கோழிப் புடம் போடவும் இப்படி ஐந்து புடம்போட்டு யெடுத்து கல்வத்திலிட்டு அரைத்து புட்டியில் போட்டு வைத்துக்கொள்ளவும்.

சாப்பிடுகிறதற்கு ஒருவிராகனிடையெடுத்து அப்பட்டமான தேனில் குழைத்து காலைமாலை ஐந்துநாள் சாப்பிடவும்.

தீரும் வியாதி மேகவாய்வு உஷ்ணவாய்வு கைகால் பிடிப்பு அஜீரணபித்தம் இவைமுதலானதும் தீரும்.

பத்தியம் நல்லெண்ணை கடுகு கொள்ளுபருப்பு அவத்திக்கீரை பூசினிக்கா லாகிரி இதுகள் கூடாதாம்.

பெரியோர்களுக்கு காணும் சகலமேக வெள்ளைக்கு லேகியம்.

கால்படி தேற்றான் வித்து கொண்டுவந்து நன்றாயுடைத்துக்கழுவி பசும்பாலில் 3 நாள் ஊரப்போட்டு யெடுத்தரைத்து அந்த நிறைக்கி சரியிடை பசும்வெண்ணை கூட்டி பிசைந்து ஆவின்நெய் அடுப்பிலேற்றி மேற்படி மருந்தைபோட்டு கிண்டிக்கொண்டே யிருக்கவும் பொன்னிறமாய் வரும்பொழுது சீரகம் ஏலம் வகைக்கு இரண்டரை விராகனிடை,

சாதிக்காய் சிறுநாகப்பூ லவங்கப்பட்டை
ஜாபத்திரி தாளிசபத்திரி சதக்குப்பி குங்குமப்பூ

அதிமதுரம் திரிகடுகு கிராம்பு கருஞ்சீரகம்.

இவை வகைக்கு விராகனிடை 5 யாவும் இடித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் 3 பலம் சீனியும் கலந்து கொண்டு அடுப்பிலிருக்கும் லேகியத்தில் சிறுக சிறுக தூவிக்கொண்டே கிளரிவருகையில் படிகாரத்தை பொங்கவைத்து பூர்த்தெடுத்த சுண்ணம் 1 பலம் தூவி கிளரியிறக்கிவைத்துக்கொண்டு நித்தம் இருவேளையாக கொட்டைப்பாக்களவு கொடுத்துவரவும் 10 நாள் கொள்ளவும் இச்சாபத்தியமாக யிருக்கவும் நெய் பால் தயிர் சேர்க்கலாம் சூடான பதார்த்தங்கள் யாவும் நீக்கி குளிர்ச்சியான மரக்கரி மாமிச முதலானது ஆகும் இம்மருந்து முடிவான 15 நாள்மட்டும் ஸ்ரீபோகம் நீக்கவும் எவ்வித வெள்ளையும் தீரும்.

வெள்ளைக்கு வெள்ளீய பஸ்பம்.

கங்காடியிலை கொண்டுவந்து அரைத்து வெள்ளீயம் 1 பலம் நிறுத்தி அரைத்த யிலையுள்வைத்து சீலை கவசம் செய்து அஞ்சு வரட்டியால் புடம்போடவும் சுன்னமாகும்.

உள்ளுக்குச் சாப்பாடுமுறை.

வேளையொன்றுக்கு கடலை பிரமாணம் 8 நாள் காலை மாலை வெண்ணெயில் குழைத்து சாப்பிடவும்.

தீரும் வியாதிகள்.

சகல வெள்ளையுந் தீரும் யிச்சாபத்தியம் ஒன்பதா நாள் ஓம ஸ்நானஞ்செய்யவும் 11 நாள் எள்ளெண்ணெயில் ஸ்நானஞ்செய்யவும்.

மன்மதசிந்தாமணி லேகியம்.

பசும்நெய் அரைபடி சீனி சர்க்கரை பத்துபலம் போட்டு அடுப்பேற்றி கரைத்து பாகுபதமாகையில்

திரிகடுகு பலம் 1 ஏலம் பலம் 1

எள்ளு	பலம் 1	கிராம்பு	பலம் 1
உளுந்து	1	கோஷ்டம்	1
வெந்தயம்	1	இலவம்பிசின்	1
இலவன்வித்து	1	குராசானியோமம்	1
மல்லி	1	மதுரம்	1
கச்சோலம்	1	ஜாதிக்காய்	1
இந்துப்பூ	1	சிறுதேக்கு	1
கடுக்காப்பூ	1	கற்சீரகம்	1
கருஞ்சீரகம்	1	ஓமம்	1
லவங்கப்பட்டை	1	லவங்கப்பத்திரி	1
மதனப்பூ	1	மூங்திரிப்பழம்	1
வசம்பு	1	கடுக்காய்	1
நெல்லிவற்றல்	1	தான்றிக்காய்	1
இலுப்பைபூ	1	செங்கழுநீர்பூ	1
அமுக்கிருக்கிழங்கு	1	சீந்தில்தண்டு	1
நெஞ்சில்பழுப்பு	1	நிலப்பனைங்கிழங்கு	1
நீர்முள்ளிவிரை	1	வாழை	1
தண்ணிவுட்டான்கிழ	1	ஆவாரை	1
சத்திச்சாரணை	1	சிறுகாஞ்சோரி	1
அபின் விராகனிடை	1		

இவை ரவிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து பசும்பாலில் பிட்டிட்டு உலர்த்திய சூரணத்தை மேற்படி நெய்பாகில் தூவிக்கொண்டே வரவும் கடைசியில் தேன் 10 பலம் எடுத்து கொஞ்சமாய்விட்டு லேகிய பதமாகு மட்டும் கிளரி யிரக்கி வைத்துக்கொண்டு வேளையொன் றுக்கு கொட்டைப்பாக்கு பிரமாணமாக இருவேளையும் சாப்பிடவும் பத்தியம் பாலுஞ்சாதம் கொள்ளவும் தேக

பலத்துடன் தாதுவிர்த்தி யுண்டாம் இருபது அல்லது நாற்பதுநாள் தின்றால் மிகநல்லது.

மதன சஞ்சீவி நெய்.

திருகடுகு களஞ்சி	4	சிறுநாகப்பூ களஞ்சி	4
கிராம்பு	4	பத்திரி	4
வால்மிளகு	4	சீரகம்	4
தக்கோலம்	4		
கோரக்காமூலி	4	அபினி	5

இவைகளை ஆவின்பாலி லரைத்து முக்கால்படி நெய்யில் வேகவைத்து நெய்யை வடிகட்டிக்கொண்டு ஒருகரண்டிநெய் சாப்பிட்டு புளியைத்தள்ளி பால்சாதம் சாப்பிட்டு புணர்ந்தால் இந்திரியம் கலிதமாகாமல் மிகவும் இன்பங்கொடுக்கும்.

பரமசிவன் பார்வதிக்குபதேசித்த

வைத்திய அரிச்சுவடி

சம்பூரணம்.

இனி இரண்டாம்பாகம் பார்க்க.

உ

சிவமயம்.

அட்டவணை

வயித்தியநாடி முறை	பக்கம்
முகவுரை	1
ஜீவவுற்பத்தியுறியும் விபரம்	4
நாடியின்குறி	7
நாடியின் மாதக்குறிப்பு	9
நாடிநிலையறிவு	10
நாடி நிற்கும்நிலை	14
வாதபித்தம் சிலேற்பனம் செய்குரி	17
பித்த வெய்குரி	
இதுவும்வேறு	
மயணச்சூ	20

அவிழ்த முறை.

பித்தத்திற்கு கியாழம் பித்த சுரத்திற்கு கியாழம்	31
பித்தசுரவாக சுரத்திற்கு கியாழம்.	35
யபம்க்கியாழம்	
கெற்பசூடுதனிய கியாழம் சீதபேதிக்கி 3-மு	39
வாதசுரத்திற்கு கியாழம்	37
பித்தசுரத்திற்கு கியாழம்	
சிலேத்துமசுரத்திற்கு கியாழம்	
நீரடைப்புக்குகியாழம் மறுமுறை	48
விரைவாதத்திற்கு கியாழம்	

விரைவாதத்திற்கு மசால்வடை 39
வயற்றிநோய்க்கும் வயற்றுகிருமிகட்குகியாழம்
அண்டவாதசாந்திபொடி ரெத்தபித்தந்தீரகுடிநீர் 40
உட்காச்சல் பிரமேகத்திற்குசாந்தி
இருமல் உப்பிஷந்தீரபொடி 41
ஈளையிருமல் சுவாசத்திற்கு கிருதம்
பிள்ளைகட்கும்சுரத்திற்கும் குளிருக்குமருந்து 42
அஜீர்ணத்திற்கு குழம்புரணங்களுக்குமொலாம்
தத்திவியாதிக்குப்பொடி
மகோதரசாந்திக்குசாறு [தீரநெய்
கிரந்தி சூலைபுண்வயத்திவலிவாய்வு பெரும்பாடுகள்
நீர்கழிச்சலுக்கு கட்டுவாதிகாதிரைச்சலுக்குதைலம்
பெரும்பாட்டுக்கு
ஒடுகுன்மத்திற்குபொடி நீர்கடுப்பிற்குமருந்து 45
பிள்ளைபெற்றவர்களுக்கு வயிற்றில்கங்கிய அழுக்கு
சிரங்குமுறைகரப்பான்ரிணங்களுக்கு எண்ணை
வாய்வுகிராணிதீர கத்தையெண்ணை 49
கரப்பான்ரிணத்திக்கும் உள்ளுக்குமேலுக்கும்
பேய்க்கிஎண்ணை குளிர்ச்சியெண்ணை
ராட்சதசூரணம்.
வாதத்தினல் வத்தகுத்தல் குடைச்சல் தீரசூரணம்
சொரிசிரங்கிற்கும் சூலைக்கும் எண்ணை 49
அரையாப்புதீர எண்ணை பெருமூத்திரந்தீர பசுமோர்
பல்வலிதீரக்கியாழம்
பித்தந்தீர தலைமுழுகும்தைலம் 50
பித்தத்திற்கு சூரணம் மூலநோய்யாவுந்தீர சூரணம்
கண்டத்திற்குமேற்பட்ட வியாதிக்கெல்லாம்சூரணம் 51
வாதம் அயச் சூரணம்
கவுசைபெறுவயிற்றுதீர பேய்துமிட்டியெண்ணை
இரத்தம்மகந்தீர தாளிச்சசூரணம் 52

கண்ணோய் 99-க்குந் தலைமுழுகும்தைலம்

கண்டமாலைக்கு மேற்பூசுந்தைலம் 53
சிலவிஷங்கட்கு குடிநீர்கணைத் தெண்ணெ

கணைத்திற்கு நியபுளஎண்ணெ கை காலில் பித்தவெடி
கண்டால்மருந்து நீரில்ரெத்தம் கண்டால் மருந்து
முழங்கால்வாதத்திற்கு கட்டடம்

சளிகோழைக்கு பிரண்டைரசம் 55
பிள்ளைபெற்றவர்களுக்கு சிழுதிரம் கட்டினல் மரு
சுகஜன்னிக்குநெய் [ந்து
சூட்டினல்கண்ட வெள்ளைக்குமருந்து
சிறுநீர்யிரங்க மருந்து

மேகபுண்புரைகள் முதலானரிணங்களுக்கு 56
பெச்சல் களும்பு தாமரைகட்கு பூசுமருந்து
தலைவலிக்கு சுருக்குதைலம்
நாக்கிலும் உதட்டிலுமுண்டாகும் புண்களுக்கு
குளிர்ச்சி பெண்ணெ

மேகம் சகலபீனிசம் மேககாங்கைக்குதைலம் 57
பீனிசத்தைலம் பித்தவெட்டை அஸ்திசுரம் கை
காந்தம்இவைகட்கு பசும்பால்தைலம் [கால்

குழந்தைகட்கு பேதிநாக்தூச்சிகள் விழ 58
பெரியோர்களுக்கு மலக்கட்டுநீங்க சூரணம்

பிள்ளைகட்கு வாய்வு உப்பிஷம் மலக்கட்டுக்கு
பூபதிமாத்திரை அமிர்தசஞ்சீவிகும்பு
பிள்ளைகளுக்கு செண்பகமாத்திரை
சாம்பல்மண் தின்னுகிற் குழந்தைகட்கு மருந்து

கக்குவானுக்கு மருந்து குழந்தைகட்கு விரைவாதம்
கண்டால் மருந்து விரைவாதத்திற்கு எண்ணை
பிள்ளைகள்பல்லில் ரத்தம் வடித்தலுக்கு மருந்து
பிள்ளைகள் காதில் ஈபுகுந்தால்மருந்து
சகல காச்சலுக்கும் கற்பூரமாத்திரை 61
கணச்சூடுதணியவெண்ணை சதைபுடைப்புக்கு மரு
ந்துபிள்ளைகள் சகலகழிச்சலுக்கு உண்டை
பிள்ளைகள் மலக்கட்டுக்கு விரோசனப்பொடி 62
கண்புகைச்சல் காதுமந்தம் மண்டை குடைச்சல்
இவைகட்கு தயிலம் சகல சுரத்திற்கு மாத்திரை
கணம் இருமல் வாய்நாற்றத்திற்கு கியாழம் 63
மண்டைபீனிசுக்குப்புகை கல்லடைப்புக்குமருந்து
சகலமேகவெண்ணை 64
சகலமேகத்திற்கும் எண்ணை 65
மேகவாய்வுக்கு வெள்ளீயபஸ்பம்
ஊஷ்ணபேதிக்கி கரியுப்பு 66
பெரியோர்களுக்கு காணும் சகல மேகவெள்ளைக்கு
லேகியம்
வெள்ளைக்கு வெள்ளிபஸ்பம் 68
மன்மத சிந்தாமணி லேகியம்
மதன சஞ்சீவி நெய்

மருந்தின் அட்டவணை முற்றிற்று.

TION

EX

புதிய நாடக விளம்பரம்.

——(*)——

ஸ்ரீ [illegible] மென்னும் [illegible] [illegible]
பாண்டவர் வைகுந்த நாடகம் 0

திருவேற்காட்டில் எழுந்தருளியிருக்கும் பராசக்தி
திருவிளையாடலென்னும் தேவி நாடகம் 0

[illegible] கலியாணமென்னும் சந்திரன் [illegible]
நாடகம் 0

[illegible] காலகேய மென்னும் அர்ச்சுனன்
தேவப்பட்ட நாடகம் 0

நாடகங்களில் ஓர் திலகமாகிய [illegible] ராஜன் நாடக
மென்னும் சத்தியவதி கலியாண நாடகம் 0

[illegible] கலியாணமென்னும் போர்மன்னன் [illegible]
நாடகம் 0

[illegible] யால் எரிந்த [illegible] நாடகம் 0

திருவெண்காட்டா ரென்னும் பட்டினத்தார் நாடகம் 0

ஸ்ரீ [illegible] பிரம [illegible] நாடகம் 0

[illegible] வில் [illegible] நாடகம்

[illegible] எனவழங்கும் கண்ணப்பநாயனார் நாடக

[illegible] சம்ஹார மென்னும் மாரியம்மன் உற்பத்தி
நாடகம்

[illegible] பாக்கெட் கோசம் (மூலம்-உரை) [illegible]

கிடைக்கும் விலாசம்:—

சரஸ்வதி விலாச புஸ்தகசாலை

நெ. 54, [illegible] [illegible] [illegible]